
# தமிழரசு

16.10.1996 ரூ.3





# இந்த இதழில் ...


★ கலைஞர் கவிதைகளில் உவமைகள் ........ 4

★ புலவர்கள் உணர்க
-முனைவர் தமிழ்க்குடிமகன் ........ 9

★ சென்னையில் கிருஷ்ணா நீர் ........ 10

★ எங்கள் ஊர் பிரச்சினை ........ 17

★ பலி
-பேரறிஞர் அண்ணாவின் கதை ........ 24

★ தெரிந்து கொள்ளுங்கள் ........ 33


★ இலக்கியத்தில் சொல்லாடல்
-முனைவர் ந. சொக்கலிங்கம் ........ 37


★ பார்வை ஒன்றே போதுமே ........ 39

★ மழைக்கால நோய்கள் ........ 41

★ செய்திச் சரம் ........ 45


★ ஆசிரியர் மடல் ........ 48




## தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2027
புரட்டாசி திங்கள் : 31
மலர்: 27 இதழ்: 8
16.10.1996
விலை: ரூ. 3

## தென் ஆப்பிரிக்காவில் உள்ள தில்லையாடி வள்ளியம்மை நினைவுச் சின்னம் அகற்றப்படவில்லை!

## மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு ஐ.கே. குஜ்ரால் கடிதம்

சட்டமன்றப் பேரவையில் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் திரு வி. லட்சுமணன் "தென் ஆப்பிரிக்கச் சத்யாகிரகப் போராட்டத்தில் அண்ணல் காந்தியடிகளுக்குஉறுதுணையாக இருந்த தமிழ் வீராங்கனை தில்லையாடி வள்ளியம்மைக்கு ஜோகன்ஸ் பர்க்கில் இருந்த நினைவுச் சின்னத்தை ஆப்பிரிக்க அரசு நீக்கிவிட்டது'' என்று குறிப்பிட்டார்.

**நெல்சன் மாண்டேலா**

அதை மீண்டும் நிறுவ, ஒடுக்கப்பட்டவர்களின் தலைவராக அரசுப் பொறுப்பேற்றிருக்கும் நெல்சன் மண்டேலா அவர்களை மைய அரசு மூலமாகக் கேட்டுக் கொள்ளத் தமிழக அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.


இது தொடர்பாக விசாரித்து அறிய, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு மத்திய வெளியுறவு அமைச்சர் திரு ஐ.கே. குஜ்ராலுக்குக் கடிதம் எழுதி இருந்தார். மத்திய அரசு இது குறித்துத் தென் ஆப்பிரிக்க பிரிடோரியாவில் உள்ள இந்தியத் தூதர் கோபாலகிருஷ்ண காந்தியை விசாரிக்குமாறு கேட்டுக் கொண்டது.

விடுதலைப் போராட்ட வீராங்கனை தில்லையாடி வள்ளியம்மை நினைவுச் சின்னம் அகற்றப்படவில்லை என்றும், இந்தியத் தூதர் கோபால கிருஷ்ண காந்தியும், விடுதலை வீராங்கனை வள்ளியம்மையின் மருமகனான கோபால் முதலியார் அவர்களும், வள்ளியம்மையின் நினைவுச் சின்னத்தைப் பார்வையிட்டதாகவும், அதற்குரிய கல்வெட்டுக் குறிப்புடன் நினைவுச் சின்னம் பாதுகாப்பாக உள்ளதாகவும் கூறி, இது தொடர்பான நிழற்படங்களை அனுப்பிவைத்துள்ளனர்.

**முதல்வருக்குக் கடிதம்**

மாண்புமிகு மத்திய அரசு வெளியுறவு அமைச்சர் திரு ஐ.கே. குஜ்ரால் இது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கடிதம்

# கவிதைப் போட்டி




கற்பனையும் சிந்தனையும் கைகோத்து நடனமிட அற்புதக் கவிபடைக்கும் அனைவருக்கும் நல்வாய்ப்பு; இதோ, தமிழரசு' கவிதைப் போட்டிக்கு அழைப்பு;

**'இன்றுபோல் என்றும் இரும்'**

- இதுதான் கவிதைத் தலைப்பு; உரிய பரிசுகள் காத்திருக்கின்றன! உங்கள் கவிதைகள் வந்து சேர வேண்டிய

**கடைசி நாள் 16.11.1996**

உங்களுடைய படைப்பு - மரபுக்கவிதையாகவோ, புதுக்கவிதையாகவோ இருக்கலாம்;
வரி வரையறை: 16
வெல்லும் கவிதைகள் வெளியாகும் இதழ் **1.1.1997**

தேர்வு பெறாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது; நகலெடுத்துக் கொள்ளவும்.

*கவிதை அனுப்பவேண்டிய முகவரி:*

ஆசிரியர் : **'தமிழரசு'**
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம் - அண்ணா சாலை,
சென்னை - 600 002.





எழுதி மேற்கண்ட விவரங்களைத் தெளிவுபடத் தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதர் திரு கோபால கிருஷ்ண காந்தி அவர்கள், ஆகஸ்ட் 6 அன்று தான் பதவி யேற்றபோது தென்னாப்பிரிக்க அதிபர் திரு நெல்சன் மண்டேலா அவர்களிடம் திருமதி வள்ளியம்மை அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் பங்காற்றியது குறித்துக் குறிப்பிட்டுள்ளார் என்பதைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் போராட்ட வீராங்கனை வள்ளியம்மையின் நினைவுச் சின்னம் அகற்றப் படாமல் பாதுகாப்பாக உள்ள செய்தியறிந்த தமிழக மக்கள் இறும்பூதெய்தியுள்ளனர்.

**வள்ளியம்மை**

வள்ளியம்மை, தமிழ் நாட்டில் உள்ள நாகை காயிதே மில்லத் மாவட்டம் - மயிலாடுதுறைக்கு அருகே உள்ள தில்லையாடி கிராமத்தைச் சேர்ந்தவராவார். இவருடைய தந்தையார் பெயர் முனுசாமி முதலியார்; தாயார் பெயர் மங்களத்தம்மாள்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள்- பெண்மணிகள் உட்படக் கொடுமைப்படுத்தப் படுவதைக் கண்டித்துக் காந்தியார் போராட்டம் நடத்தினார். அதில் கலந்துகொண்டு கைதானபோது வள்ளியம்மைக்கு வயது 16. சிறைக் கொடுமைகளால் துன்புற்ற இவர், பெரிதும் நலிவுற்ற நிலையில் முன்கூட்டியே விடுதலை செய்யப்பட்டார். மறுபடியும் நலம் பெறாமலே **1914**-ஆம் ஆண்டு பிப்ரவரி **22**-ஆம் நாள் இறந்துபோனார்.

பிறகு 1934-இல் இந்தியாவுக்கு வந்திருந்த காந்தியடிகள், அக்டோபர் 22-இல் தில்லையாடிக்குச் சென்று வள்ளியம்மையின் இல்லத்தைக் கண்டும், உற்றார் உறவினரோடு பேசியும் மனமுருகினார்.

வள்ளியம்மை நினைவாகத் தமிழக அரசு சார்பில் தில்லையாடியில் அந்நாள் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் நினைவுத் தூண் நாட்ட வகை செய்தார். அந்தக் கிராமம், மாண்புமிகு தமிழக முதல்வராகக் கலைஞர் அவர்கள் பொறுப் பேற்றபின் 'மாதிரிக் கிராமமா' கவே ஆக்கப்பட்டது.

**-அ. மதிமாறன்**



☆ பிறருக்குத் தொல்லை
தராத வாழ்வே
ஒழுக்க வாழ்வு.

**-தந்தை பெரியார்**



**தாய்: ஏண்டா அந்த அண்டாவைப் போட்டு இப்பிடி டமடமன்னு அடிக்கிறே?**

**மகன்: தங்கச்சி பாப்பாவுக்கு வேடிக்கை காட்றேன்மா!**

**தாய்: பாப்பா எங்கேடா?**

**மகன்: இந்த அண்டாக்குள்ளே அழாமெ இருக்காம்மா!**

# கலைஞரின் உவமைகள்



டாக்டர் சு. சுனந்தாதேவி

'பூங்காவினைப்போல் அழகும், கவர்ச்சியும் தருவது மட்டுமின்றிக் காய்கறித் தோட்டங்களைப் போல் நல்ல பயனும் தருவதே இலக்கியம்' என்பார் வில்லியம் டெம்புள்.

நம்மைச் சுற்றியுள்ள பொருட்களை நாம் காண்பதற்கும், கவிஞன் காண்பதற்கும், வேறுபாடு உள்ளது. கவிஞனுடைய கண்கள் எதையும் உற்று நோக்கும் ஆற்றல் பெற்றவை. ஊடுருவிப் பார்க்கும் இயல்பு பெற்றவை. அங்ஙனம் கண்டதைக் கலைச் சிறப்போடு வெளியிடும் கவிஞனே சிறந்த கவிஞனாகின்றான்.

கவிஞனுடைய கவிதைகள் சிறப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை உவமை, உருவகம், நடை, கற்பனை என்பன. வேண்டுமென்றே அணிகளைப் பெய்து எழுதினால் கவிதை செயற்கையாக இருக்கும். பொருத்தமான அணிகள் இருந்தால் கவிதை சிறக்கும். காலத்தை வென்று வாழும்.

**உவமை**

உவமைகளைப் பயன்படுத்துதல் மூலமே கவிதை முழுமை அடைகிறது எனலாம். உவமையைப் பயன்படுத்தும் முறையிலிருந்தே ஒரு கவிஞனின் சிறப்பை உணர முடியும். அழகுள்ள ஒரு பொருளை மற்றொன்றின் அழகோடு ஒப்பிட்டுக் காணும் இந்த உவமையே கலைகள் பலவற்றிற்கு அடிப்படை என்பர்' டாக்டர் மு.வ.

உவமை கூறுவதில் இருவகை உண்டு. புரியாத ஒன்றைப் புரிய வைக்க வரும் உவமை. புரிந்த ஒன்றையே மேலும் விளக்கப் பயன்படுத்தும் உவமை. கலைஞர் தம் கருத்துக்கு அரண் செய்யவே, அழுத்தம் கொடுக்கவே உவமைகளைக் கையாண்டுள்ளார். புரியாத ஒன்றைப் புரிய வைக்கப் பயன்படுத்தவில்லை. அவருடைய உவமைகளில் பொருந்தாத உவமைகள் இல்லை; வலிந்து புரிந்து கொள்ள வேண்டிய தேவையும் இல்லை. சில நேரங்களில் தம் கருத்துக்கு அழுத்தம் தர அடுக்கு உவமைகளையும் பயன்படுத்துகின்றார்.

**'காலைக் கதிரவன்போல்**
**கைசிவக்கக்**
**கொடை வழங்கும்**
**காவலர்கள் வாழ்ந்திருந்த**
**தமிழ்நாடு'**

-என்பது கலைஞரின் கவிதை.

கதிரவன் உலகுக்கே ஒளி தருபவன். கதிரவன் கலைஞர் கட்சியின் சின்னம். அதைக் கட்சிச் சின்னமாக்கப் பெருமளவில் அவர் முயன்றிருக்கிறார். அதனால் கதிரவன் உலகத்தின் ஒளிவிளக்காக இருப்பினும் கலைஞரைப் பொறுத்த வரை கதிரவன் கழகத்தின் விளக்கு.

கலைஞர் தமிழ்நாட்டை மறந்ததில்லை. நாட்டையாண்ட மன்னர்களை மறந்ததில்லை. தமிழர்களை மறந்ததில்லை. அதனால் அவர் மூவேந்தரைப் பற்றிப் பாடும்போது, 'காலைக் கதிரவன் போல்' என்ற அடையைக் கொடுக்கின்றார். காலைக் கதிரவன் சிவந்திருப்பதுபோல் காவலர்களின் கரங்களும் கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரங்கள் என்று பெருமையோடு பாடுகிறார்.

**'சாதல் இன்னே வரட்டுமென்று**
**சென்றுவிட்ட தலைமகனும்**
**சந்தனத்துக் கட்டைபோல**
**மணக்கட்டும் இலக்கியத்தில்'**

இங்கு 'சந்தனத்துக் கட்டை என்ற உவமை, சிகரமாகத் திகழ்கிறது. சந்தனத்துக்கட்டை எந்த நிலையிலும் தன் மணத்தை இழப்பதேயில்லை. குறுகினவிடத்தும் மணம் குறையாத.

எரித்தாலும் இனிய மனமே எழும். என, சந்தனக் கட்டையின் மணம் போலச் சமர்க்களத்தில் சாவைத் தழுவிக் கொண்ட வீரனின் புகழும் என்றும் நிலைக்கும் என்று நிலைநாட்டு கின்றார்.

**'இந்நாட்டுப் படையிலோர்**
**வீரர் குறைந்திட்டால்**
**நல்ல உடையிலோர் கிழிசல்**
**வந்தது போலன்றே'**

-என்பார் கலைஞர்

தன் தந்தையின் மரணத்தைக் குறித்துப் புறநானூற்றுத் தாய் புலம்புவதைக் குறிக்கின்றார். அவள் தந்தையின் மரணத்திற்கு வருந்தவில்லை. அவன் வீர மரணமே எய்தியிருக்கிறான். ஆனால் ஒரு வீரன் குறைந்து விட்டானே என்றுதான் குமுறுகிறாள், வீரரின் மரணம் 'நல்ல உடையிலோர் கிழிசல் வந்ததுபோல' என்று நல்ல உவமையால் கூறுகிறார்.

பழைய உடையில் கிழிசல் ஏற்பட்டால் அதைப்பற்றி நாம் கவலைப்படுவதில்லை. ஆனால் புது உடையில் ஒரு பொத்தல் ஏற் பட்டாலும் மனம் பொறுப்ப தில்லை மீண்டும் மீண்டும் புதிய உடை பாழாகி விட்டதே என்ற உணர்ச்சிதான் தோன்றும். அதைப்போல அந்தத் தாய் வருந்துகிறாள். கோழைகளின் மரணத்தால் எந்த இழப்பும் ஏற்படாது. ஆனால் வீரனின் மரணம் நாட்டிற்குப் பெரும் பாதிப்பாகும் என்பதை இங்கு விளக்குகின்றார்.

சேலத்தில் நடைபெற்ற காதலா? வீரமா? என்ற கவியரங்கத்தில் கவிஞர்களைப் பற்றி மட்டும் பாடாமல் அவை யோரை நோக்கியும் அன்புக் கட்டளை இடுகின்றார்.

**'பந்தயத்துக் குதிரைகளை**
**முடுக்குதல் போல்**
**பந்தலிலே இருப்போரே**
**முழக்கிடுங்கள்'**

-என்பதே அவர் சொல்.

ஒரு நல்ல கவிஞனுக்குத் தேவை நல்ல தூண்டுதல்; தூண்டத் தூண்ட விளக்கு ஒளி பெறுதல் போல அவனும் பெருமை யுறுவான். விமரிசனத்தால்தான் எதுவும் நன்கு வளர முடியும். இங்கு அவையோரைப் பார்த்துக் கவிஞர்களை உற்சாகப்படுத் துங்கள் ஆர்வமூட்டுங்கள் என்று கேட்கிறார்.

குதிரை இயல்பாகவே நன்கு குதித்து ஓடக்கூடியது. பந்த யத்துக் குதிரை பாய்ந்து பாய்ந்து ஓடக் கூடியது. அதை இன்னும் நன்கு முடுக்கிவிட்டால் முன்னே சென்று வெற்றிபெறும். அதைப் போல, இங்கு வந்திருப்பவர்கள் நல்ல கவிஞர்கள். அவர்களை அவையோர் ஆர்ப்பரித்து ஊக்கு வித்தால், அவர்கள் நல்ல கவிதையைச் சுவைக்க முடியும் என்று உணர்ச்சியூட்டும் திறம் அறிந்து மகிழ்தற்குரியது.

பாரதிதாசனைப் பற்றிக் குறிக்கும்போது,



**கலை கலைக்காகவே என்று சொல்ல இயலாது; விளக்கு எப்படி விளக்குக்காக இல்லையோ, அதைப் போலக் கலை என்பது மக்களுக்காகத்தான்!**

**'நீர் வீழ்ச்சி ஓசை - நெற்**
**கதிர்கட்டு மீசை'**

-என்கிறார்.

என்று உவமிக்கிறார். பாரதி தாசன் பாடலின் ஓசை நீர்வீழ்ச்சி போன்றது என்று கூறுவது மிகச் சிறந்த உவமை. 'நெற் கதிர்க்கட்டு மீசை' என்ற இடத்தில் கதிர்கட்டை மீசைக்கு உவமித்த முதல் கவிஞர் கலைஞர்தான்.

'நேரு கண்ட ஜனநாயகம்' என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் நேருவின் வன்மை, மென்மைகளைக் குறிக்கிறார், கலைஞர் அவர்கள்.

**'எண்ணெயிட்ட கடுகாய்**
**வெடிக்கும்**
**கோபம் எனினும்**
**எண்ணெ யிட்டார் விடுதலை**
**வேள்விக் கென்போம்'**

-கலைஞரின் கருத்துப்படி

எண்ணெயில் இடப்பட்ட கடுகு போன்ற கோபம் நேரு விற்கு வரும் ஆனால் விடுதலை வேள்வியில் அவர் செய்த பணி பெரியது என்கிறார். குறை யற்றவன் மனிதனில்லை ஒருவனிடத்துள்ள குறைகளைக் கூறுவதைவிட அவனுடைய குணங்களை எடுத்துக் காட்டுவதுதான் உயரிய பண்பு என்பதை இந்த உவமை மூலம் அவர் விளக்குகின்றார்.

**அடுக்கு உவமை**

'தனியே ஒரு பொருளைக் கண்டு அதன் அழகில் ஈடுபட்டு அதற்கு ஓர் ஒப்புமை கூறுதல் எளிது. பல பொருள்களை ஓரிடத்தே கண்டு அவற்றின் பலவகை அழகிற்கும் விளக்கம் தரும் பல்வேறு உவமைகளை உணர்ந்து கூறுதல் அரிய கலை ஆகும். இந்தக் கலை கலைஞரி டத்தில் சிறப்பாகக் காணப் படுகிறது.

அடுக்கு உவமைகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒரு பொருளுக்கே வரும் பல உவமைகள் என்றும், பல பொருள்களுக்குத் தொடர்ந்து கூறப்படும் பல உவமைகள் என்றும் பிரிக்கலாம்.

**ஒரு பொருளுக்கே பல உவமைகள்**

கும்பகர்ணன் இறந்தபிறகு இராவணன் போர்புரியும் நிலை யினைப் பின்வருமாறு விளக்கு கிறார், கலைஞர்

**'வேல்பட்ட புலிபோல-**
**விடுபட்ட கணைபோல-**
**அணையிட்ட வெள்ளம்**
**போல- ஆயிரம்**
**வாள்பட்ட மார்புடையான்,**
**போரிட்டான்'**

கலைஞர் இராவணனைத் தமிழனாக, நல்லவனாக, வீர னாகக் காட்டுகின்றார். இராவணன் கொடியவன் என்ற எண்ணம் சமுதாயத்தில் வேரோடியிருக்கிறது. அந்த எண்ணம் தவறானது என்பதைக் காட்ட வந்த கலைஞர் அந்த மனப்பான்மை அகல வேண்டும் என்பதற்காகத் தம் கருத்துக்கு வலிவூட்ட அடுக்கான உவமை களைப் பயன்படுத்துகின்றார். அவன் வீரம் இதனால் நன்கு படமாக்கப்படுகின்றது.

முதல் உவமை 'வேல்பட்ட புலிபோல' என்பது புலி தன் இயல்பிலேயே சீற்றம் மிகுந்தது. வேல் தாக்கிவிட்டால் அதன் சீற்றத்தை அடக்குதல் மிக அரிதான செயலாகும்.

அடுத்த உவமை 'விடுபட்ட கணை போல' என்பது. வீரனின் ஆற்றலுக்கு ஏற்பக் கணை மிக வேகமாகச் செல்லும்; அதன் வேகத்தையும் அடக்க முடியாது.

மூன்றாவதாக 'அணையிட்ட வெள்ளம் போல' வெள்ளமும் கட்டுக் கடங்காதது, கரையுடைந்த வெள்ளத்தைக் கட்டுப்படுத்துதல் மிகக் கடினமானச் செயல். எனவே, சினத்தோடு செருக் களம் செல்லும் இராவணனின் நிலையை மூன்று உவமைகளால் பெற வைத்தல் சிறப்பாக அமைந்துள்ளது.

தந்தை பெரியாரின் மறை வினால் தாங்கொணாத் துயர டைந்தவர் கலைஞர், தீண்டா மையைக் குழி தோண்டிப் புதைத்து, ஒரு குலத்துக்கொரு நீதி என்ற நிலையை நீக்கித் தமிழர்க்குப் பாதுகாப்பாய் இருந்த பகுத்தறிவுத் தந்தையின் மரணம் அவர் நெஞ்சை நெருஞ்சி முள்ளாய்க் குத்தியது. அந் நிலையில் பெரியார் பற்றிய கவியரங்கில் அவர் மரணத்தைப் பற்றிப் பாடுகிறார்.

**'இன்றைக்கும் நினைக்கிறேன்**
**பெரியார்**
**இளவயதில் மறையவில்லை**
**நிறைவயது வாழ்ந்துவிட்டே**
**ஓய்வு கொண்டார் எனினும்**
**தாஜ்மகால் திடுமெனத்**
**தரைக்குள்ளே**
**போய் விட்டால்**
**அதைக் கட்டி, ஆண்டுபல**
**ஆயிற்றே**
**என்று ஆறுதல்தான்**
**பெறுவோமா?**
**தஞ்சைக் கோபுரம்**
**சாய்ந்துவிட்டால் அதற்கு**
**வயது அதிகமென்று சொல்லித்**
**தாங்குதல்தான் எளிதாமோ?"**

-எனக் கலங்குகின்றார்.

பகுத்தறிவு இயக்கம் தோற் வித்த தலைவர் பெரியார். அப பெரியாரைப் போன்று பெ வாழ்வு வாழ்ந்தவர், பெருமை பெற்றவர் மறைந்தது மிகப் பேர ழப்பாகும். அந்த ஆற்ற மையைக் கவிதையில் வெளிப் படுத்துகின்றார். தாஜ்மகால் உலகப் புகழ் படைத்தது தஞ்சைக் கோபுரம் தமிழ் நாட்டுக்கே பெருமை தருவது எனவே, உலக அளவில் பெயர் பெற்றவர் தமிழ்நாட்டில் தலை சிறந்த தலைவராய்த் திகழ்ந்தவர் புதுச் சரித்திரம் படைத்து மக்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டியவர் என்று பாடுகிறார் கலைஞர். இந்த உவமைகள் சிறந்த அவல உணர்ச்சியைத் தோற்றுவிக்கின்றன.

பெருஞ்சித்தனாரின் வறு மையை,

**'பூப்போல வாடி**
**வதங்கிடுவாள் துணைவி,**
**புழுப்போலச் சுருண்டு**
**படுத்திடுவாள் அன்னை**
**பூனைபோலப் பானை**
**உருட்டிடுவான் பசியாலே**
**பிள்ளை'**

-என்று பாடுகிறார். இங்கு பூ, புழு, பூனை என்ற உவமைகள் மிகப் பொருத்தமாக ஒன்றை யொன்று விஞ்சி நிற்கின்றன.


-இவை போன்ற

கலைஞரின் உவமைகள் கருத் துள்ளன. கற்பனை சிறந்தவை. வெறுங் கற்பனை என்றோ வேண்டாதவை என்றோ எதையுமே விலக்க முடியாது.

கலைஞர் தம் மேடைப் பேச்சுக்களிலும் மிகுதியான உவமைகளைக் கையாள்வது பழக்கம். அவையும் மிகச் சிறப்பாக அமையும். 'கலைஞர் அவர்கள் தம்முடைய எழுத் திலும் பேச்சிலும் தனியொரு சகாப்தத்தை உருவாக்கு கிறாரென்றால், அதற்கு அடிப் படைக் காரணம், அவர் கையாண்டு வரும் அருமையான அற்புதமான உவமைகள்தான்.

# அறிவியல் துளிகள்


பூமியானது ஒரு நொடிக்குச் சூரியனை 29.79 கி.மீ, அதாவது மணிக்கு 1,07,244 கிலோ மீட்டர் வேகத்தில் சுற்றுகிறது.



சந்திரனுக்குச் சுய ஒளி இல்லை. சூரிய ஒளியானது அதன் மேல் பட்டுப் பிரதிபலிப்பதால் மட்டுமே அதைக் காண முடியும். அமாவாசையன்று சந்திரன், சூரியனுக்கும் பூமிக்கும் இடையில், ஏறத்தாழ ஒரே வரிசையில் அமையும்பொழுது, சந்திரனின் ஒளியூட்டப்பட்ட பாதியை நாம் காணமுடிவதில்லை; ஏனென்றால் அப் பகுதியானது சூரியனை நோக்கி இருக்கும். சூரியனின் ஒளிபடாத சந்திரனின் பாதிப்பகுதியே நம்மை நோக்கி இருக்கும் மேலும், அப்பொழுது சந்திரன் சூரியனோடு உதித்துச் சூரியனோடு மறையும். ஆகவேதான் அமாவாசை நாள் இரவில் சந்திரனை நாம் பார்க்க முடிவதில்லை.

○○

இயல்புக்கு மீறிய நரம்புத் தூண்டல்களால், கண் இமைத் தசைகளில் ஏற்படும் அரிப்பே நம் கண்களின் துடிப்பாகிறது.



○○


அளவுக்கு மீறிய வாசனை சிலருக்கு மூச்சுத் திணறல், தலைவலி ஆகியவற்றை உண்டாக்கிவிடும். காரணம் ஒவ்வாமையே (Allergy) ஆகும்.

○○

தாய்மார்களின் இரத்தமே தாய்ப்பாலாகச் சுரக்கிறது. அவர்களுடைய மார்பில் ஆயிரக் கணக்கான இரத்த நாளங்கள் உள்ளன. மார்பகத்தில் உள்ள அல்வியோலையும்-அதன் நாளங்களும் இரத்த நாளங்களிலிருந்து சக்திமிக்க பொருட்களான கால்சியம், அமினோ அமிலங்கள், கனிமப் பொருட்கள், கரிமப் பொருட்கள் பிரித்தெடுத்து பால் கோளங்களுடன் சேர்ந்து வெண்மை நிறப் பாலாக மாறுகிறது. இரத்தத்தின் குளுகோஸைப் பிரித்தெடுத்து, சிசுவானது ஏற்றுக் கொள்ளத் தக்க லாக்டோசாக மாற்றி குழந்தைக்கு ஊட்டப்படுகிறது. நாள்தோறும் இப்படி, 3 கிலோ குழந்தைக்குப் போதுமான அரை லிட்டர் பால் சுரக்கும்.

○○

ஊசி போடுவதில் 3 முறைகள் உண்டு. இரத்த நாளம் மூலம் மருந்தைச் செலுத்தினால் இரத்த ஓட்டத்தின் மூலம் மருந்து வேகமாக உரிய இடத்தை அடைந்து வேலை செய்யும்.



தசை மூலம் ஊசிபோட்டால், அப்பணி சிறிது தாமதமாகும். வாய் வழியாகச் செலுத்தினால் இன்னும் கால தாமதமாகும்.

○○

உடல் பயிற்சி எந்த நேரத்திலும் செய்யலாம்தான் ஆனால், உணவு உட்கொள்ளுமுன் வெறும் வயிற்றோடு செய்வதுதான் நல்லது. இதனால்தான் காலகாலமாக அதிகாலையில் இவ்வாறு உடற்பயிற்சி செய்வதே ஏற்றதெனக் கருதப்பட்டும் வருகிறது.

○○

# சென்னைக்குக் கிருஷ்ணா நதிநீர் வந்த வரலாறு!


சென்னைக்கு வந்துள்ள கிருஷ்ணா நதிநீர் குறித்து கடந்த 1978ம் ஆண்டிலிருந்து தமிழகம் ஆந்திர மாநில அரசுகளுக்கு இடையே பல தடவை பேச்சுவார்த்தை நடந்துள்ளது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | பேச்சுவார்த்தை நடந்த இடம் | பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டவர்கள் |
|---|---|---|
| *1978 ஜுன் 15* | ஐதராபாத் | தமிழகம் மற்றும் ஆந்திர மாநில முதல்வர்கள். |
| *1982 ஆகஸ்ட் 19* | ஐதராபாத் | இரு மாநில முதல்வர்கள். |
| *1983 ஏப். 18* | ஐதராபாத் | மாண்புமிகு ஆந்திர முதல்வர் என்.டி. ராமராவுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்தது. கிருஷ்ணா நதிநிர் குறித்து ஒப்பந்தமும் கையெழுத்தானது. |
| *1989 ஜுன் 18* | ஐதராபாத் | இரு மாநில முதல்வர்கள். |
| *1990 பிப். 4* | ஐதராபாத் | அப்போதைய ஆந்திர முதல்வரும், தற்போது மேதகு ஆளுநராகவும் உள்ள திரு. சென்னா ரெட்டிக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை |
| *1992 ஜனவரி 11* | ஐதராபாத் | மாண்புமிகு ஆந்திர முதல்வர் ஜனார்த்தன ரெட்டிக்கும், முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும் இடையே பேச்சுவார்த்தை |
| *1996 ஜுன் 8* | ஐதராபாத் | மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடுவுக்கும், மாண்புமிகு தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகனுக்கும் இடையே பேச்சுவார்த்தை |
| *1996 ஜுலை 18* | ஐதராபாத் | மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடுவுக்கும், மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு வீராசாமி ஆகியோருக்கும் இடையே பேச்சுவார்த்தை |

சென்னைக்குக் கிருஷ்ணா நதிநிர் கொண்டு வருவதற்காக ஆந்திராவுடன் தமிழகம் எட்டு முறை நேரடி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. அனைத்துப் பேச்சுவார்த்தைகளும் ஆந்திரப்பிரதேச மாநிலத் தலைநகரான ஐதராபாத்தில் நடந்துள்ளன. பேச்சுவார்த்தை அனைத்திலும் ஆந்திர முதல்வர்கள் பங்கேற்றுள்ளனர். இவற்றில் ஆறு பேச்சு வார்த்தைகளில் மட்டும் தமிழக முதல்வர்கள் பங்கேற்றுள்ளனர்.

**-கோ. பாஸ்கரன்**

# புலவர்கள் உணர்க!



அன்றைக்கு நாடாண்ட ஆங்கி லேயர்
ஆட்சிக்குத் தேவையென எழுத்தர் தம்மை
ஒன்றுக்குப் பத்தாக உருவாக் கற்கே
ஊட்டிவந்தார் கல்விதனை ஆங்கிலத்தைக்
கன்றுக்குப் பால்வார்ப்ப தேபோல் நின்று
காத்தார்கள் நாம்கூட களிப்புற் றோமே!
இன்றைக்குத் தமிழரசு வந்த பின்னும்
எதற்கிங்கே ஆங்கிலக்கை யொப்பம் சொல்வீர்!

வெயிலடித்தால் சுருள்கின்ற புழுக்க ளைப்போல்
விசுக்கென்று சுருண்டுவிழும் வீரக் கூட்டம்
குயில்களைப்போல் அழகான குரல் இருந்தும்
கூவுதற்குக் கூசுகின்ற நீங்கள் நல்ல
மயில்களைப்போல் சாயலினைப் பெற்றி ருந்தும்
மண்டைகளை, ஆட்டுகின்ற குரங்கு கள்போல்
உயிர்பிழைக்க ஆடுவதும் சோற்றை மட்டும்
உயிர்பொருளாய் நத்துவதும் பொருத்தம் தானா?

புலவரெலாம் தமிழின்பால் பற்றுக் கொண்டு
புதுக்கருத்துச் சொல்வதிலும் எளிமை யாகப்
பலர்கற்கும் வாய்ப்பாகப் பைந்த மிழ்நூல்
படைப்பதிலும் தாழ்வுமனப் பாங்கை விட்டுக்
கலக்கமிலா நெறியுடனே உண்மைக் கல்வி
காண்பதிலும் சலுகைக்கோ அல்ல லுக்கோ
அலக்கண்வரின் அஞ்சாது துணிந்து நிற்கும்
ஆண்மைதனைப் பெறுவதிலும் முதன்மை கொள்க!

**முனைவர்**
**தமிழ்க் குடிமகன்**
(மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி
- தமிழ்ப் பண்பாட்டுத்துறை
அமைச்சர்)



# சென்னையின் தாகம் தீர்க்க தவழ்ந்துவரும் கிருஷ்ணா நதி

**சென்னையில் தெருக் குழாய்களில் காலிக்குடங்களும், காலி டப்பாக்களும் குடிதண்ணீருக்காகக் கால்கடுக்க இரவு பகலாக இனி நிற்கவேண்டியதில்லை.**

சென்னை நகரில், தெருக் குழாய்ச் சண்டைக் காட்சிகள் திரைப்படங்களில்கூட காட்டு வதற்கு யோசிக்கப் போகிறார்கள்.

சென்னை நகருக்கு வருகிற விருந்தினர்கள் இனி, 3 நாட் களுக்கு மேலும் தங்கமுடியும்!

இதெல்லாம், கேட்பதற்குப் புதுமையாக இருக்கிறதல்லவா! சென்னை மாநகரம் நூற்றாண்டு காலமாகப் பல வரலாற்றுத் திருப்பங்களை வரிசையாகப் பெற்றிருந்தாலும், அதன் புகழுக்குச் சிறு பங்கம் விளை விப்பது போல், குடிதண்ணீர் பிரச்சினை காலம்காலமாகத் தொடர்ந்து வந்துகொண்டி ருந்தது. இந்தக் குடிதண்ணீர்ப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்து, தவித்திருந்த வாய்க்குத் தாகம் தீர்க்கத் தண்ணீர் கொடுப்பதுபோல், தாராள மனதோடு புதுக்குடி போகும் புதிய மணப்பெண்ணைப்போல், ஆந்திராவிலிருந்து தவழ்ந்து, அழகு தமிழ்நாட்டிற்கு வருகின் றாள், கிருஷ்ணாநதி.

கிருஷ்ணா நதிநீர்த்திட்டம் ஓர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் என்பதற்குப் பல அசைக்கமுடியாத சான்று களை அடுக்கிக்கொண்டேபோக லாம். இரண்டு மாநிலங்கள் மனம் வைத்தால் மலையைக் கூட புரட்டிவிட முடியும். ஏன் மலையையும் குடைந்து நீரையும் கொண்டுவர முடியும் என்ப தற்கு இத்திட்டம் ஒரு முத் தாய்ப்பு.

இரண்டு மாநிலக் கட்சிகள் கைகோர்த்தால் ஆற்ற முடியாத அரும்பணிகளைக்கூட அரங் கேற்ற முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. பல நூற்றாண்டு களில் நிறைவேற்றப்படப் போகும் நதிகளை இணைக்கின்ற ஒரு மாபெரும் எண்ணத்திற்கு ஒரு ஊற்றுக்கால். இல்லை இது ஒரு நாற்றாங்கால் என்றுகூட சொல்லலாம்.

இப்படிப் புகழ்பெற்ற தமிழ் நாட்டின் வரலாற்றில், பொன் னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டிய கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் பல மேடுகளிலும், பள்ளங்களிலும், காடுகளிலும் கடுமையான நிலப்பரப்பிலும் கடந்து வரலாற்றில் நடந்து வந்திருக்கிறது. அதன் பாதையை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

கிட்டத்தட்ட *115* ஆண்டு களுக்கு முன்னால் *(1881)* சென்னை நகரில் 5 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டி ருந்த அந்தக் காலத்தில் ஏற்பட்ட குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணச் சென்னை மாகாணத்தின் பாசனத்துறை நிபுணராக

> ✭ நெஞ்சிலே
> வலுவிருப்பின் வெற்றி
> தஞ்சமென்று உரைத்து
> வந்து நம்மிடம்
> கொஞ்சிடுவது உறுதி.
>
> -அறிஞர் அண்ணா






விளங்கிய கர்னல் டபிள்யு.எம். எல்லீஸ் என்பவரால் கிருஷ்ணா நதிநீரைச் சென்னைக்குத் திருப்பிவிடும் திட்டம் வரையப் பட்டது. ஆனால், பல்வேறு நிர்வாகச் சிக்கல்களினால் அத்திட்டம் சீர்குலைந்து, சிதில மடைந்து என்ன காரணத் தாலோ கிடப்பில் போடப் பட்டது. பின்னர், இந்திய விடுதலைக்குப் பின்னால், அத் திட்டத்துக்குச் சிறகு முளைத்து விண்ணில் பறக்க முனைந்தது எனலாம்.

*1947-53* ஆண்டுகளில் இத்திட்டம் முழுதும் ஆய்வு செய்யப்பட்டு, கிருஷ்ணா பெண்ணார் நதித்திட்டம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டது. இந்திய அரசின் திட்டக் குழு வினால், அமைக்கப்பட்ட கோஸ்லா கமிட்டி சென்னைக்குக் குடிநீர் வழங்கும் இத்திட்டத்தை கிருஷ்ணாபெண்ணார் நதிநீர்த் திட்டத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டு செயல்படுத் தலாம் என்று பரிந்துரை செய்தது.

*1961* வாக்கில் அமைக்கப் பட்ட குல்காட்டி கமிட்டியிடம் தமிழ்நாடு அரசு *17.83* ஏக்கர் அளவுக்குப் பாசனம் செய்யும் வகையில் 15 டி.எம்.சி. அளவு தமிழ்நாட்டுக்கு குறிப்பாகச் சென்னைக்கு வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விடுத்தது. தொடர்ந்து தமிழ்நாடு அரசு வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் பல்வேறு அமைப்புகளிலும் இக்கோரிக்கையை விடாமல்




வலியுறுத்திக் கொண்டேயிருந்தது. இந்தச் சமயத்தில்தான் (1963) மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய 3 மாநிலங்களும் தலா 5 டி.எம்.சி. அளவுக்குத் தண்ணீரைப் பிரித்து எடுத்துக்கொள்ள முன் வந்துள்ளன என்று நாடாளுமன்ற மக்களவையில் தெரிவிக்கப் பட்டது. ஆனால், என்ன காரணத்தாலோ அது அப்படியே நின்று போய் பின்னர் 1969ல், ஏப்ரல் மாதத்தில் கிருஷ்ணா நதிநீர் பிரச்சினை நடுவர் மன்றம் என்ற அமைப்புக்கு விடப்பட்டது. அந்த நடுவர் மன்றம் கிருஷ்ணா நதி தமிழ்நாட்டில் பாயவில்லை என்ற ஒரு காரணம் காட்டி, தமிழ்நாட்டை அந்த நடுவர் மன்றக் குழுவில் சேர்க்கவில்லை. அதே நடுவர் மன்றம் 1973-ஆம் ஆண்டு வழங்கிய தீர்ப்பில் சென்னைக்குக் கிருஷ்ணா நதிநீர் வழங்குவதைப் பற்றி இருட்டடிப்புச் செய்து விட்டது. நடுவர்மன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த 3 மாநிலங்களும் சென்னைக்குக் கிருஷ்ணா நதிநீர் தரவேண்டும் என்று ஒவ்வொன்றாய்க் கேட்டுக்கொண்டன.

இந்த இக்கட்டான நேரத்தில் தான் அன்றைய முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள் சூழ்நிலைகளைச் சுட்டிக்காட்டி சென்னைக்குக் கிருஷ்ணா நதிநீர் கொடுக்க வேண்டும் என்று முதன்முதலில் அழுத்தம் திருத்தமாக முதல் குரலை எடுத்துவைத்து மைய அரசுக்கு ஒரு கடிதம் எழுதினார். ஆனால், மைய அரசோ கிருஷ்ணா நதிநீர் நடுவர் மன்றத்தில் 'தமிழ்நாடு உறுப்பினர் இல்லை' என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி முதல்வர் கலைஞர் அவர்கள் வைத்த கோரிக்கையை நிராகரித்து விட்டது.

அதன்பின்னர் 1976 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அன்றைய பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தி மகாராஷ்டிரா, ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய முதல்வர்களின் முன்னிலையில் சென்னைக்குக் கிருஷ்ணா நீர் வழங்குவதுபற்றி அறிவித்தார். அதன்பின்னர் அந்த அறிவிப்பு இரண்டு மாதங்களில் சம்பந்தப்பட்ட மாநில முதல்வர்கள் கையொப்பமிட ஓர் ஒப்பந்தமாக நிறைவேறியது.

ஆந்திராவும் இத்திட்டத்தை வறட்சியால் பாதிக்கப்பட்ட இராயலசீமா பகுதியில் விவசாயத்திற்குப் பயன்படும் வகையில், விரிவானத் திட்டமாக வரைந்தது. அந்தத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசும் அப்படியே ஏற்றுக்கொண்டது. இந்தச் சூழ்நிலையில் 1983ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் கடுமையானக் குடிநீர்ப் பிரச்சினை



ஏற்பட்டது. இதனைத் தீர்ப்ப தற்கு அன்றைய மாநில முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். மற்றும் ஆந்திர முதல்வராக இருந்த என்.டி. ராமராவ் ஆகியோர் கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தி சென்னைவாழ் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க முயன்றார்கள்.

அந்த முயற்சியால்தான் 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் நாள் தமிழ்நாட்டில் கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் என்ற பெயரிலும், ஆந்திராவில், தெலுங்குகங்கைத் திட்டம் என்ற பெயரிலும் இந்தத் திட்டம் செயல்பாட்டுக்கு வரத் தொடங்கியது. அப்போது, இந்தத் திட்டத்தின் செலவீட்டுத் தொகையாக ரூ.260 கோடி ஆகும் என்று கணிக்கப்பட்டி ருந்தது. பின்னர், காலப் போக்கில் இது ரூ.2190 கோடி அளவுக்கு உயர்ந்துவிட்டது. இந்தத் தொகையில் 1018 கோடி ரூபாய் ஆந்திர அரசாலும், 512 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசாலும் செலவிடப் பட்டுள்ளது. இதில், கால்வாய் அமைப்புப் பணி மற்றும் பூண்டி, புழல் நீர்த்தேக்கங்களின் கரை களில் 2 அடி உயரத்துக்கு உயர்த்தியது போன்ற பணிகளுக் காகத் தமிழ்நாடு ரூ.180 கோடி அளவுக்குக் கூடுதலாகச் செலவு செய்துள்ளது.

கிருஷ்ணா நதிநீர்த் திட்டத் தின் மூலம் தமிழ்நாட்டு எல்லையில் அதாவது 'ஜீரோ பாயிண்ட்' என்று அழைக்கப் படும் பகுதியில் வெயிலில் ஆவியானது போக 12 டி.எம்.சி. தண்ணீர் ஆந்திர அரசு தரவேண்டும் என்பது முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது, முதல் கட்டமாக 3 டி.எம்.சி. தண்ணீர் 29.9.96 முதல் வரத் தொடங்கியுள்ளது.

இந்த நிகழ்ச்சியைப் பெருமைப் படுத்தும் வகையில் தமிழ்நாட்டின் எல்லைப் பகுதியான தாமரைக் குப்பம் என்ற கிராமத்தருகே 29.9.96 அன்று காலை 10 மணியளவில் எளிய முறையில் விழா நடைபெற்றது. மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. என். சந்திரபாபு நாயுடு அவர்கள் விழா மேடைக்கருகே அமைக்கப் பட்டுள்ள மதகினைத் திறந்து கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வர, தொடங்கிவைத்தார். அவர் பேசும்போது, "இன்று வழங்கப் படும் தெலுங்குகங்கை நதிநீர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்காகத் தான்" என்று இரண்டு முறை அழுத்தி சொன்னதிலிருந்தே இந்தத் திட்டம் விரைவாக நிறைவேறிய தற்குக் கலைஞர் அவர்களே முழுமுதற் காரணம் ஆகும் என்பது தெரியவரும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்ச்சியைக் குறிக்கும் வகையில் மதகு அருகே எழுப்பப்பட்ட நினைவுத் தூணை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்துத் தமிழ்நாட்டின் சார்பாக ஆந்திர முதல்வருக்கு நன்றி தெரிவித்தார்.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சென்ற மாதம் தமிழ்நாடு சட்டப்பேரவையில் 'கிருஷ்ணா நதிநீர்' அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாளன்று சென்னைக்குக் கிடைக்கும் என்று அறிவித் திருந்தார். ஆனால், அந்தச் சம யத்தில் பெய்த திடீர் மழை காரணமாகக் கால்வாய்க் கரை களில் உடைப்பு ஏற்பட்டு குறித்த நாளில் தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் வந்து சேர இயலாத சூழ்நிலை நேர்ந்துவிட்டது. இருப்பினும், முதல்வர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட விடா முயற்சியினால், அண்ணா பிறந்த செப்டம்பர் மாதத்துக் குள்ளேயே அதாவது, 29.9.96 அன்று தமிழக எல்லைக்குள் கிருஷ்ணா நதிநீர் தவழ்ந்து வந்தது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகும்.

வருகின்ற 3 டி.எம்.சி. தண்ணீர் தற்போது செம்ப ரம்பாக்கம் ஏரியில் நிரப்பி பாதுக்காக்கப்பட்டு வருகிறது. 31 கி.மீ. நீளமுள்ள கால்வாய்ப் பகுதிகளை வளப்படுத்தி நீரைச் சுத்தப்படுத்தவும், செங்குன்றத் தில் ரூபாய் 30 கோடி செலவில் ஒரு குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு நாளைக்கு 300 மில்லியன் லிட்டர் தண்ணீரைச் சுத்தப்படுத்தும் திறன் கொண்டது.

இந் நிகழ்ச்சியில் மாண்புமிகு மத்திய தொழில்துறை அமைச்சர் முரசொலிமாறன், மாண்புமிகு பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் திரு. என்.வி.என். சோமு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கோ.சி. மணி, ஆந்திரப் பிரதேச அமைச்சர் டாக்டர் சிவப்பிரசாத ராவ் மற்றும் அமைச்சர் பெருமக்கள் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண் டார்கள். விழாவில் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு துரை முருகன் அவர்கள் வரவேற்புரை யாற்றினார். தமிழகத் தலைமைச் செயலாளர் திரு. கே.ஏ. நம்பியார் மற்றும் ஆந்திரத் தலைமைச் செயலாளர் திரு. ராஜாஜி ஆகியோர் கலந்து கொண்டார்கள். கிருஷ்ணா நதிநீர்த் திட்டத் தலைமைப் பொறியாளர் திரு. எஸ்.பி. சுப்பிரமணியன் நன்றி நவின்றார்.

**-எம்.வி.எம். அசோகன்**

# கிருஷ்ணா நதிநீர் பெற்ற இனிய விழா

கடுந்தவமிருந்து, கங்கையை விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்குக் கொண்டுவந்தான் பகீரதன் என்கிறது புராணம். ஆந்திரத்திலிருந்து, அதை அரும்பாடுபட்டுச் சென்னை மாநகர மக்களின் தாகம் தீர்க்க இங்கே கொண்டுவந்து பெருமை பெற்றிருக்கிறார் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்.

ஆந்திர எல்லையைத் தாண்டி தமிழ்நாட்டினுள் தன்னுடைய இதமான இனிய பயணத்தைத் தொடங்கியது கிருஷ்ணா.


முறைப்படி அதை மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. என்.சந்திரபாபு நாயுடு அவர்கள் வழங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பெற்றுக்கொள்ளும் விழா சென்னையில் நடைபெற்றது. இருமாநிலப் பாசனத் துறை அமைச்சர்கள் மட்டுமல்ல; தலைமைச் செயலாளர்களும், பொறியாளர்களும்கூட அவ் விழாவில் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்கப் பட்டார்கள். மாண்புமிகு மத்திய அமைச்சர்களும், மாநில அமைச்சர்களும், நாடாளுமன்ற - சட்டப் பேரவை உறுப்பினர் களும் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தனர்.


இராஜாஜி மண்டபத்தின் முன்னால் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் நடைபெற்ற அந்தச் சரித்திரச் சிறப்புமிக்க விழாவிற்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் வரவேற்புரையோடு தொடங்கிய கிருஷ்ணா நதிநீர் பெறும் விழா நிகழ்ச்சிகளைத் திருமதி நிர்மலா பெரியசாமி தொகுத்து வழங்கினார். "என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம் என்றான் பாரதி; என்று தணியும் இந்தச் சென்னையின் தண்ணீர்த் தாகம் என்று தவித்தார்கள் மக்கள்; இனி அந்தக் கேள்விக்கே இடமில்லை..." என்று அவருடைய தொகுப்புரை தொடங்கியது.

அவ்விழாச் சொற்பொழிவு களில் சில தேன்துளிகள் வருமாறு:

“எத்தனையோ வரலாற்றுச் சாதனைகளைப் புரிந்த நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களின் புகழ் மகுடத்தில் இன்று புதிதாகப் பதிக்கப்பட்டு ஜொலிப்பதுதான் இந்தக் கிருஷ்ணா குடிநீர்த் திட்டம். 1983க்குப் பிறகு ஆந்திராவில் என்.டி. ராமராவ், சென்னா ரெட்டி, ஜனார்த்தன ரெட்டி, விஜயபாஸ்கர ரெட்டி, சந்திர பாபு நாயுடு ஆகிய ஐந்து முதலமைச்சர்களையும் - தமிழ் நாட்டில் எம்.ஜி.ஆர்., வி.என். ஜானகி, ஜெயலலிதா, கலைஞர் ஆகிய நான்கு முதலமைச்சர் களையும் பார்த்திருக்கிறது இந்தக் குடிநீர்த் திட்டம். இதற்காக நான்கு ஆந்திர முதல்வர்களைச்





★நாம் செய்யும் மாறுதல் சுகபோகிகளுக்குப் பாதகமாக இருப்பதால், அவர்களின் இன்பவாழ்வு பாதிக்கப்படும்; ஆகவே, அவர்கள் மாறுதலை மறுப்பார்கள் அல்லது எதிர்ப்பார்கள்.

-தந்தை பெரியார்

சந்தித்துப் பேசிய நம்முடைய கலைஞரே இறுதியில் வெற்றி பெற்றார். 'கங்கை கொண்டான்', 'கடாரம் கொண்டான்' என்பது போல் இதற்காகவே இவரைக் 'கிருஷ்ணா நிதிநீர் கொண்டான்' என்று வரலாறு பாராட்டும்".

**-திரு. துரைமுருகன்**
(மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர்)

"இந்திய வரைபடத்திலேயே புதியதோர் நதிநீர் வழித்தடத்தை இடம்பெறச் செய்திருக்கும் மாபெரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சி இது".

**-திரு. கோ.சி. மணி**
(மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்)

"இந்திய வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்க நாள் இந்நாள். மத்திய அரசு ஈடுபாடு ஏதுமின்றி, இரண்டு மாநிலங்களே ,முன் வந்து சாதித்திருக்கின்றன. மா நிலங்களுக்கிடையே இத்தகைய உறவு வலுப்பெற வேண்டும். அதுதான் கூட்டாட்சி; மத்திய அரசு ரெபரிபோல் இருக்க வேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன மாநில சுயாட்சிக் கொள்கையை நிறை வேற்றும் அளவிலேயே இதில் நமது முதல்வர் கலைஞர் அவர்களும், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்களும் செயல்பட்டிருக்கிறார்கள்".

**-திரு.'முரசொலி' மாறன்**
(மாண்புமிகு மத்திய அரசு தொழில்துறை அமைச்சர்)

"இத்திட்டத்திற்கான பணிகள் இரவு பகலாக நடைபெற்றன; இதன்மூலம் சென்னைவாசி களுக்கு மட்டுமல்ல; எங்களுடைய ராயலசீமையில் உள்ள 47 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கும் தண்ணீர் கிடைக்கும்; அந்த வறட்சிப் பகுதியும் வளம்பெறும்".

**-திரு. கோடல சிவப்பிரசாத ராவ்**
(மாண்புமிகு ஆந்திர மாநில நடுத்தரப் பாசனத்துறை அமைச்சர்)

"ஆந்திராவிலிருந்து சென்னைக்குக் கிருஷ்ணா நதிநீர் கொண்டுவந்ததன் மூலம், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் புதிய சரித்திரத்தைப் படைத் திருக்கிறார். மொழிவாரியாகப் பிரிந்துள்ள இந்த மாநிலங்களை நதிவாரியாக இணைத்திருக் கிறார். கங்கை முதல் கன்னியாகுமரி வரை இணைக்கும் மாபெரும் வரலாற்றையும் கலைஞர்தான் சாதிக்க வேண்டும். தமிழும், தமிழ் மக்களும், தமிழ்நாடும் இருக்கும்வரை இதற்காகவே மக்கள் கலைஞரை நினைத்துப் பார்ப்பார்கள்."

**-திரு. எம். அருணாசலம்**
(மாண்புமிகு மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)

"திரு. கருணாநிதி அவர்கள் முதல்வராக வேண்டும் என்பதற் காகவே சென்னைக்குத் தண்ணீர் விடும் இத்திட்டம் காத்துக் கிடந்தது போலிருக்கிறது. இப்படி ஆந்திர மாநிலத்திற்கும் தமிழ் மாநிலத்திற்கும் நல்லுறவு ஏற்பட்டு, உயர்வு பெற்று மக்கள் ஒற்றுமையோடு வாழ வேண்டு மென்று நான் ஆசைப்படு கிறேன். என் கைகளால் சென்னைப் பட்டினத்திற்குத் தண்ணீர் தருவதை என் பூர்வ ஜென்ம சாபல்யமாக நினைத்து மகிழ்ச்சியடைகிறேன். எப் போதும் எனக்கு டாக்டர் கருணாநிதிதான் தலைவர்; என்றென்றும் அவர் எங்கள் தலைவராக விளங்க வேண்டும்".


**-திரு. என். சந்திரபாபு நாயுடு**
(மாண்புமிகு ஆந்திர முதல்வர் )

"இந்த விழாவிற்குத் தலைமையேற்றிருப்பவர் நமது ஆளுநர் திரு. சென்னாரெட்டி அவர்கள்; அவர் சென்னை ரெட்டியாகவே ஆகிவிட்டவர். அதனால்தான் சென்னைக்குத் தண்ணீர் கிடைக்கும் நேரத்திலே சென்னாரெட்டி தலைமை யேற்றிருக்கிறார். ஆந்திர முதல்வர் அவர்கள் என்னைத் தலைவர் என்று குறிப்பிட்டார்; இப்படிப்பட்ட தளபதியைப் பெற்றமைக்காக நான் பெருமை யடைகிறேன். இன்றைக்குக் கிருஷ்ணா நதிநீர் கிடைத்திருக் கிறது. அது எனக்காகப் பார்த்த பெண்; நான் பார்த்த பெண்; இன்றைக்குத் திருமண வயதை எய்தி மணவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மண விழாவிற்குத் துணை

நின்றவர்களெல்லாம் நன்றிக்கு உரியவர்கள், பாராட்டுக்கு உரியவர்கள், போற்றுதலுக்கு உரியவர்கள்".

**-கலைஞர்**
(மாண்புமிகு தமிழக முதல்வர்)

“முதல்வர் கலைஞர் அவர்களின் நிர்வாகத் திறமையின் காரணமாகவும், வழிகாட்டுதலின் காரணமாகவும் கிருஷ்ணா நீரைக் கொண்டு வந்திருக்கிறார். நான் ஆந்திர முதல்வராக இருந்தபோது இந்த நீரைத் தரப் பாடுபட்டேன்; இப்போது பெற்றுக்கொள்ளும் நிலையில் இருக்கிறேன். இந்தப் பெருமையால் நான் இரண்டு தரப்பிலும் மகிழ்ச்சியடைகிறேன். இத் திட்டத்தின் மூலம் இரு மாநில மக்களும் பயனடைய முடியும். அண்ணா பிறந்த இந்த மாதத்தில் கிருஷ்ணாநீர் வருவது சிறப்புக்குரியது. இன்றுபோல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில்



ஆந்திரமும், தமிழ்நாடும் என்றும் இணைந்து நிற்க வேண்டும்”.

**-டாக்டர் எம். சென்னாரெட்டி**
(மேதகு தமிழக ஆளுநர்)

இந்த விழாவிற்குத் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார் முதலான பல்வேறு கட்சியினரும் ஆந்திரப் பெருமக்களும், சென்னைவாழ் பெருமக்களும் பல்லாயிரக்கணக்கில் திரண்டு வந்திருந்தார்கள்.

ஒரு சிறிய வெள்ளிக் குடத்திலிருந்து கிருஷ்ணா நதிநீரை மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. என். சந்திரபாபு நாயுடு அவர்கள் உவகையோடு ஊற்ற, சென்னை வாழ் மக்கள் சார்பில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மகிழ்ச்சி பொங்க மற்றொரு பாத்திரத்தில் முறைப்படி அதைப் பெற்றுக் கொண்டார்.

திரண்டிருந்த பொது மக்கள் அப்போது- “கலைஞர் வாழ்க”... ''சந்திரபாபு நாயுடு வாழ்க'' என்று எழுப்பிய ஆனந்த முழக்கம், அந்த வட்டாரத்தையே அதிரச் செய்தது!

**-‘சோழராஜா’**

முதியவர்களுக்குப் பாதுகாப்பும், அரவணைப்பும் தருகின்ற உணர்வைச் சமுதாயத்திலே தோற்றுவிக்க வேண்டும் என்பதற்காக, ஐக்கிய நாடுகள் சபை சார்பில் ‘முதியோர் நாள்’ அக்டோபர் முதல்நாள் கடைப்பிடிக்கப்பட்டது.



# எங்கள் ஊர் பிரச்சினை!



**பிரச்சினை**

தஞ்சையிலிருந்து சுற்றுப்பட்ட ஊர்களுக்குச் செல்லும் சோழன் நகரப் பேருந்துகளில். எல்.எஸ்.எஸ். என்ற பெயரில், சென்ற அரசில் கட்டணத்தை உயர்த்திவிட்டனர். இக் கட்டணம் தனியார் பேருந்து கட்டணத்தைவிட அதிகம். இதனால் பயணிகள் தனியார் பேருந்தை நாடுவதால் அரசுக்கு இழப்பும், தனியார் பேருந்துகளில் அதிக நெருக்கடியும் ஏற்படுகிறது. ஆண்டு முழுவதும் வெளியூர் வேலைக்குச் செல்லும் பயணிகளுக்கு ஒரு குறிப்பிட்டத் தொகை அதிமாகச் செலவாகிறது. அந்தத் தொகை இருந்தால் மேலும் ஒரு வாரத்திற்கு பயணம் செய்யலாம். அதிகமான கிராமங்களைக் கொண்ட தஞ்சை போன்ற சிறு நகரங்களுக்கு LSS தேவையில்லை. பெரும்பாலான சோழன் நகரப் பேருந்துகள் மிகவும் பழுதடைந்துள்ளன. இருக்கைகளே இல்லாதபேருந்துகளும், அதிக மோசமடைந்துள்ள அடித்தளமும் கொண்ட பேருந்துகளும் இயங்குகின்றன. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எல்.எஸ்.எஸ். ஐ எ.எஸ்.எஸ். ஆக மாற்றி கட்டணத்தை குறைக்க வேண்டுமென்று அவதியுறும் பயணிகள் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பழுதடைந்த பேருந்துகளையும் மாற்றி பயணிகளை உரிய நேரத்தில் உரிய இடத்தில் கொண்டு போய் சேர்க்குபடி கேட்டுக்கொள்கிறேன்.

**நீடா. இளஞ்செழியன்,**
சாலியமங்கலம்-613 504
தஞ்சை மாவட்டம்.

## தீர்வு

1. எல்.எஸ்.எஸ். நகரப் பேருந்துகளில் அரசு ஆணைப்படியே கட்டணம் வசூலிக்கப்படுகிறது. (அரசு ஆணை எண் 1704, உள்துறை (போக்குவரத்து VII), தேதி 24.11.93 மற்றும் அரசு ஆணை எண் 286, உள்துறை (போக்குவரத்து VII) , தேதி 23.2.86.)

பொது மக்கள் பயன்பாடு கருதி பயண நேரத்தைக் குறைக்கும் வண்ணம் குறிப்பிட்ட நிறுத்தங்களில் மட்டும் பேருந்துகளை நிறுத்திப் பயணிகளை ஏற்றி/இறக்கும் வகையில் மேற்படி எல்.எஸ்.எஸ். நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

2. சோழன் போக்குவரத்துக் கழகத்தில் பழைய பேருந்துகள் அவற்றின் வயதின் அடிப்படையில் கழிவு செய்யப்படுகின்றன. அவ்வாறு கழிவு செய்யும்போது, சோழனின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு கழிவு செய்யும் பேருந்துகளின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகிறது. 1996-97ஆம் ஆண்டில் இதுவரை இக் கழகத்தில் 39 பேருந்துகள் கழிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் தற்சமயம் 57 நகரப் பேருந்துகள் 30.9.96 அன்று கழிவு செய்யப்பட உள்ளன.


3. 1.10.96 அன்று நகரப் பேருந்துகளின் சராசரி வயது ஆறு ஆண்டுதானிருக்கும், பேருந்துகள் அன்றாடப் பராமரிப்பில் கவனம் செலுத்தப்படுகின்றன. பெரும்பழுதடைந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டு பழுது பார்க்கப்படுகின்றன. பேருந்துகளை நல்ல நிலைமையில் இயக்க எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**வி.கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.

## பிரச்சினை

எங்கள் ஊரில் உள்ள தெருவில் விளக்கு ஏதும் எரியவில்லை. அவை அனைத்தும் இன்னும் பொருத்தப்படவே இல்லை. விளக்குகள் பொருத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**கா.வீ. முருகன்,**
காறை அஞ்சல்,
செஞ்சி வட்டம் - 605 201. விழுப்புரம்.



## தீர்வு

செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் காறை கிராமத்தில் 100 சதவீதம் தெரு மின்விளக்கு எரியவைக்கத் தீவிர சிறப்பு முகாம் 24.7.96 முதல் 20.8.96 வரை நடை பெற்றதில் அனைத்து தெரு மின்விளக்குகளும் எரிய வைக்கப்பட்டன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது அக்கிராமத்தில் உள்ள 74 தெரு விளக்குகளும் எரிகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்,**
ஊராட்சி ஒன்றியம், செஞ்சி,
விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டம்.

## பிரச்சினை

புள்ளமங்கலம் பாலக்குறிச்சியிலிருந்து சேந்தங்குடி ஆற்றுப் பாலம் வரை இராஜன்கட்டளை செல்லும் சாலையில் சோழன் பேருந்துகள் சேந்தங்குடி-புத்தகரம் சென்றுவருகின்றன. தார்சாலை மன்னார்குடி நெடுஞ்சாலைத் துறையால் செய்யப்பட வேண்டியவை 0/0-0/6, 3 பர்லாங் தூரம் ஆற்றங்கரையில் அமைந்துள்ள தார்சாலை இதற்கு அடுத்த பக்கமும் இதற்கு இந்தப் பக்கமும் தார் போடப்பட்டுள்ளது. இந்தச் சாலை முந்தைய போக்குவரத்து அமைச்சர் இருந்த காலத்தில் புதிய பேருந்து விடப்பட்டு அப்போது போடப்பட்ட சாலையும் சீர்குலைந்து கொண்டிருக்கிறது. இதனைச் சீர் செய்ய ஏற்பாடு செய்யவும்.

**அ. அப்துல் லத்தீப்,**
பொய்கை நல்லூர், சேந்தமங்கலம்-610 06
ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டம்



மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாளையொட்டி, காந்தி மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக்காட்சி அரங்கத்தை, மேதகு முன்னாள் மராட்டிய ஆளுநர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் பார்வையிட்டார் (2.10.96).

## தீர்வு

கடிதத்தில் குறிப்பிட்டுள்ள இராஜன்கட்டளை சாலையானது மன்னார்குடி கோட்டம் பராமரிப்பில் உள்ள கும்பகோணம்-கொரடாச்சேரி-லெட்சுமாங்குடி-மாவூர்பெரிய மாவட்ட சாலையில் கி.மீ 47/4 ல் பிரிந்து செல்லும் அரிச்சந்திராபுரம். திருவாரூர் இதர அரசு மாவட்ட சாலையில் கி.மீ.2.0ல் பிரிந்து செல்லும் இராஜன்கட்டளை சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் கி.மீ.0/0-1/245 = 1.245கி.மீட்டராகும். இதில் கி.மீ. 0/0-0/6வரை இதர அரசு மாவட்ட சாலையாக நெடுஞ்சாலைத்துறை மூலம் புதுப்பிக்கப்பட்டு தார்ச்சாலை வறட்சி நிவாரணப் பணியில் செப்பனிடப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. இதன் தொடர்ச்சி பகுதியான கி.மீ.0/600 - 1/245 =0.645 கி. மீட்டர் வகைப்படுத்தப்படாத கோட்டூர் ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். இச்சாலை தற்பொழுது கருங்கல் கப்பி சாலையாக உள்ளது. மேற்படி பகுதியை ஊராட்சி ஒன்றியம் மூலம் பிரேரணைகள் தயாரித்து கோட்டப்பொறியாளர் (நெ) தஞ்சாவூர் கிராமச் சாலைத் திட்டத்தின் மூலம் மேம்பாடு செய்து நெடுஞ்சாலைத் துறைக்கு நிலந்தர கோட்டத்திற்கு ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இடைப்பட்ட பகுதி மேம்பாடு செய்தால் ஆலந்தூர் ஊட்டியரணி இதர அரசு மாவட்ட சாலையில் இணையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்படி இடைப்பட்ட பகுதியான 0.645 கி.மீ மேம்பாடு செய்வது தொடர்பாகக் கோட்டப்பொறியாளர் (நெஊப) நாகப்பட்டினம் அவர்களுக்கும், கோட்டப்பொறியாளர்(நெ) கிராமச்சாலைகள் கோட்டம், தஞ்சாவூர் அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**உதவிக்கோட்டப் பொறியாளர்,**
நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறை,
மன்னார்குடி.

# இண்டர்நெட்டில் தமிழில் செய்தி — முதல்வர் கலைஞர் வாழ்த்து!

இந்திய மொழிகளிலேயே தமிழில்தான் இணையம் எனப் படும் இண்டர்நெட் மூலமாகச் செய்திப் பரிமாற்றம் செய்யப் படுகிறது. இந்தச் செய்திப் பரிமாற்றம் 30.9.96 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் இல்லத் திலேயே அரங்கேற்றப்பட்டது.

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண் பாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவரது இல்லத்திலிருந்து இந்த முயற்சி பற்றிக் குறிப்பிட்டு, தங்களை வாழ்த்துமாறு மாண்புமிகு முதல்வருக்குச் செய்தி அனுப் பினார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன் இல்லத்திலிருந்த படியே இந்தச் செய்தியைக் கணிப் பொறியில் படித்தவுடன் தன் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் பதிவு செய்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வர், அவரது துணைவியார் திருமதி ராஜாத்தி அம்மாள், மாண்புமிகு அமைச்சர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் வளர்ச்சிச் செயலர் திரு வை. பழனிச்சாமி, இதனை இயக்கிக் காட்டிய சென்னையில் இயங்கி வரும் இணையத்தொடர்பு நிறுவனமான சைபர்லின்க் நிறுவனத்தை நடத்திவரும் திரு ரவி, சிங்கப்பூரிலிருந்து வருகை தந்து ஏற்பாடு செய்த 'முரசு அஞ்சல்' எனும் மென் பொருளுக்கு உரிமையாளரான திரு மு. முத்தெழிலன், திரு கோ. அரவிந்த் ஆகியோருடன் ஆர்வத்தோடு உழைத்த எழுத்தாளர் திரு கா. கந்தசாமியும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

வெகுவிரைவில் இந்த ஏற்பாடுகள் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் விரிவு படுத்தப்படும் என மாண்புமிகு அமைச்சர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் தெரிவித்தார்.


மாண்புமிகு அமைச்சர்




★ சாதிமுறை, சடங்கு என்பனவெல்லாம் தந்திரமாக அமைக்கப்பட்ட பொருளாதாரச் சுரண்டல் திட்டமேயாகும். ஆகவே, சாதிமுறையை ஒழிப்பதும் சமதர்மத் திட்டம்தான்.

-அறிஞர் அண்ணா

டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அனுப்பிய செய்தி விவரம் வருமாறு:





அண்ணல் காந்தி அடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, குறளகத்தில் பட்டு கண்காட்சித் திறப்பு விழா மற்றும் கதர் சிறப்பு விற்பனையை மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு அந்தியூர் ப. செல்வராஜ் அவர்கள் துவக்கி வைத்தார் (2.10.96).

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு,

இளவல் தமிழ்க்குடிமகன் எடுத்துரைக்கும் செய்தி வெறும் ஏடுகளிலும், நூல்களிலும் தாள்களிலும் மட்டுமே நிற்கும் தமிழ்ச் செல்வத்தை அறிவியல் கண்ணோட்டத்தில் உலக மெங்கும் எடுத்துச் செல்லும் உயர் பணியை இன்று நம் தமிழ் வளர்ச்சித்துறை செயற்படுத்தத் தொடங்கியுள்ளது. தமிழனின் பெரிய தமிழ் இலக்கியத்தின் செழுமையைத் தமிழ் அறிஞர் களின் படைப்பு மேன்மையை மொழி, கலை பண்பாடு போன்ற கோணத்தில் உகை மெங்கும் சொல்வதற்கு இன்று அறிவியலை கையில் எடுத்துள்ளோம். தங்கள் கட்டளையை ஏற்று உலகிலுள்ள ஒவ்வொரு தமிழனும் செயற்பட வைக்கும் உயர்பணியை இன்று தொடங்கி இருக்கும் எங்களை உளமார வாழ்த்துங்கள்.

நன்றி!

-மு. தமிழ்க்குடிமகன்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அமைச்ச ருக்கு அனுப்பிய மறுமொழி:

அன்புள்ள இளவல் தமிழ்க் குடிமகன் அவர்களுக்கு இனிய வாழ்த்து. தமிழ் மொழியை அறிவியல் கண்ணோட்டத்தில் உலகம் முழுமைக்கும் எடுத்துச் சொல்லுகின்ற மேன்மைமிகு தொண்டினைத் தொடங்கியுள்ள காலகட்டத்தில் அந்தத் தொண்டு தொடரவும், தொடரும் தொண்டு இடரும் தடைகளை இடரவும் தங்களைப் போன்ற தமிழ்ப் பணியாளர்களின் தோளுக்கு வலிவு ஏற்பட வாழ்த்துகிறேன்.

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அச்செய்தியில் குறிப் பிட்டுள்ளார்.


தமிழரசு

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ. 72
அரையாண்டுச் சந்தா ... ரூ. 36
'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ. 36

படிக்க ... பயன்பெற ... பாதுகாக்க

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :

உதவி இயக்குநர்,
**'தமிழரசு'**
அரசினர் தோட்டம்
சென்னை - 600 002.

மாணவர் பக்கம்:

# பொய் சொல்லல் நல்லதப்பா!



**வே**கம் வேகமாக பஸ் ஸ்டாண்டுக்கு வந்து சேர்ந்தார் வைத்தியநாதன். தூரத்தில் பல்லவன் பஸ்ஸின் பச்சை முகம் தெரிந்து. 'கூட்டம் அதிகமிருக்கும் டிக்கட்டுக்குப் பணத்தை எடுத்து வெச்சுப்பம்' என்றெண்ணித் தனது சட்டைப் பைக்குள் கையைவிட்டார், அவர். பகீரென்றது. நேற்றிரவு தனிப்படப் பைக்குள் போட்டிருந்த ஒரே ஒரு பத்து ரூபாய்த்தாளைக் காணோம்! அதில் கிடந்த சில்லறைகள் டிக்கட்டுக்குப் போதுமானவைகளாக இருந்தன.

ஒரு வழியாக அலுவலகத்திற்குப் போய்ச்சேர்ந்தார் வைத்தியநாதன். பகல் முழுதும் ஒரு வேலையும் ஓடாமல் அந்தப் பத்து ரூபாய் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தார். பிறகு மாலை வெய்யில் ஒடம்புக்கு நல்லது என்று அன்றுதான் தெரிந்துகொண்டவர் போல, வியர்க்க விருவிருக்க நடந்தே வீடு வந்து சேர்ந்தார் மனிதர்.

அவர் வந்ததும் வராததுமாகக் கைப்பையை வாங்கி மேசைமேல் வைத்தாள் அவர் மனைவி பாக்கியம். அப்போதுதான் அதனருகே, மேஜையில் இருந்த ஒரு புதுப்பேனாவைப் பார்த்தார், வைத்தியநாதன்.

"என்ன அப்பிடிப் பார்க்கிறீங்க? நம்ம பையன். வழீல ஒரு பத்து ரூவா நோட்டு கீழே கிடந்து எடுத்தானாம். அதுலதான் இதை வாங்கீருக்கான். நல்லாயிருக்கில்லே?" என்றாள் அவள்.

சிரிப்போடு "ஓகோ" என்றார் வைத்தியநாதன். அடுப்படியிலிருந்து எட்டிப் பார்த்த மகனின் காதைப் பிடித்து வெளியே இழுத்தார். "ஏண்டா, பத்து ரூபாவெ கீழே கிடந்தா எடுத்தே?" என்றார் கோபமும் கேலியுமாக.

மிரள மிரள விழித்தான், பையன்,

"என்னோட சட்டைப் பையிலேர்ந்துதானே அதை எடுத்தே உண்மையைச் சொல்லுடா"! என்று அவர் அதட்டவே மிரண்டுபோன பையன், 'ஆமாம்' என்பது போல அழமாட்டாக் குறையாகத் தலையாட்டினான்.

"ஏண்டா, பொய் சொன்ன வாய்க்குப் போஜனம் கிடைக்காதுன்னு நீ படிச்சதில்லே? ... போன மாசம் தானே நீ கிழிக்கிற கிழிக்கு ஒரு பேனா வாங்கிக் குடுத்தேன். நீ கிழிக்கிற கிழிக்கு இன்னொரு பேனாவா?" என்று அவர் பேசிக்கொண்டிருக்கும் போதே ஒரு பெட்டைக் கோழி படபடத்துக்கொண்டு

அவர்கள் வீட்டுக்குள் ஓடி வந்தது.

யாரோ அதைத் துரத்தி வருவதுபோல் தெரிந்தது. வெளியே எட்டிப்பார்த்த வைத்தியநாதன், சட்டென்று உள்ளே திரும்பினார். பரணில் இருந்த ஒரு கூடையைத் தாவி எடுத்து, அந்தக் கோழியை உள்ளே கொண்டுபோய்ப் போட்டு மூடிவிட்டுக் கூடத்திற்கு ஓடிவந்தார்.

பாக்கியமும் அவள் மகனும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

கையில் அரிவாளுடன் மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க ஒரு முரடன், அவர்கள் வீட்டு வாசலில் வந்து நின்றான். "ஏங்கையா, இந்தப் பக்கம் ஒரு பொட்டைக் கோழி வந்ததுங்களா?" என்றான்.

''அப்படியொன்னும் வரலியேப்பா?" என்றபடி, சாவதானமாகச் சட்டையைக் கழற்றினார் வைத்திய நாதன்.

"வீட்ல விருந்தாளி வந்துருக்குதுங்க, ராத்திரி சாப்பாட்டுக்கு ஆகுமுன்னு பார்த்தா தப்பிச்சுடுச்சே சனியன்'' என்றவாறே வேகமாகப் போய்விட்டான், அவன்.

தன்னை வித்தியாசமாகப் பார்த்த மனைவியையும் மகனையும் பார்த்துச் சிரித்தபடி இப்படிச் சொன்னார் வைத்தியநாதன்- "என்னடா, கொஞ்சம் முன்னால பொய்சொல்லக் கூடாதுன்னு நமக்குச் சொல்லீட்டு, இவன் இப்ப புளுகறானேன்னுதானே பார்க்கிறீங்க? பொய் சொல்றதால ஒரு நல்லது நடக்கும்னா தாராளமா சொல்லலாம். தப்பில்லே! கோழி இதோ இருக்குன்னு நாம பிடிச்சுக் கொடுத்திருந்தா, அவன் அதெ இந்நேரம் வெட்டிப் போட்டிருப்பான். அதான் அப்படிப் பொய் சொன்னேன். பத்துரூபாய் கீழே கெடந்து எடுத்தேன்னு நீ பொய் சொன்னாப்ல இல்ல இது. புரிஞ்சுதோ?"

**"பொய்யையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்"**

-அப்படீன்னு திருவள்ளுவரே சொல்லீருக்கார் தெரியுமோ" என்று அவர் விளக்கியதும், தாயும் மகனும் வாயடைத்துப்போய் நின்றார்கள்.

-ராஜா



"தங்கள் மனமாளிகையிலிருந்து, மன்னவா! என்னை விரட்டிட எப்படித் துணிந்தீர்கள்? என்ன குற்றம் காண்கிறீர்கள் என்னிடம்? எந்தக் கண்களிலிருந்து காதலொளி வீசிற்றோ அவைகளா இந்தக் கொடுமையைக் கக்குகின்றன?

"தங்களை நான் மணவாளனாக ஏற்ற நாளில், மன்னர் அவையிலே தங்கட்கு ஓர் இடம் கிடைக்கும் என்று கூட எண்ணம் பிறந்திருக்க முடியாதே. நாட்டிலே இருந்து வந்த படைத் தலைவர்களிலே ஒருவராகத் தாங்கள் இருந்த போதல்லவா தங்களை நாயகனாகப் பெற்றேன். நாடாளும் நிலை தங்கட்கு வந்ததும், காடாள நான் துரத்தப்பட வேண்டுமா! தங்களுடைய உயர்வு கண்டு உள்ளம் பூரித்துக் கிடந்தவளல்லவா நான், என் நாதனின் வீரமும் தீரமும், பெருங் காவியமாகிறது. என் கண்ணாளனின் காலடியிலே பிரான்சு நாடே கிடக்கிறது. என் கணவனின் சுட்டு விரல் காட்டும் திக்கு நோக்கிச் செல்லும் படைச் சூறாவளியிலே, சாம்ராஜ்யங்களெல்லாம் சரணாகதி ஆகின்றன! உலகமே போற்றிப் புகழ்கிறது. என் உள்ளத்திலே கோயில் கொண்டுள்ளவனை! அவனை யாராலும் அடக்க முடியாது. ஆற்றல் மிக்கவன்.

# பலி

## அறிஞர் அண்ணா

அஞ்சா நெஞ்சன், என்று அவனியே புகழ்கிறது.

"எனினும், என் காதலுக்குக் கட்டுண்டு கிடப்பவர்தான் காவலன்! போர் வீரன்தானா கிடைத்தாள் இவளுக்கு? எந்தக் களத்திலே சிக்கி, காலிழந்து முடமாகப் போகிறானோ கண்ணிழந்து கபோதியாகப் போகிறானோ! இவளை மணம் செய்து கொண்டாளே, இவளுக்கென்ன எழிலுக்குக் குறைவா? என்று ஏளனமொழி பேசியோரை நான் காணும் போதெல்லாம்- எப்படிப்பட்டவன் பார்த்தீர்களா, என் கணவன், ஏமாளிகளே! மணிமுடி அவன் காலடியில், மன்னவர்கள் அவனுக்கு அடைப்பக்காரர்கள். மண்டிலங்கள் அவனுக்குப் பூப்பந்து!



"என்றெல்லாம் எண்ணிக் கொள்வேனே ஏறுநடை கொண்டவனே! எட்டுத் திக்கிலும் வெற்றிக் கொடி நாட்டியவனே! என் இதயத்துக்கு இன்பமே! வாழ்வின் ஒளியே! புதிய வையகத்தை எனக்களித்த காதலனே! என்னையா, விலக்கி விடத் துணிந்தீர்! என்னையா? உமது இன்பவல்லியையா?"

-உண்மையாகத்தானா? கெட்ட கனவொன்று காண்கின்றேனா? இல்லையேல், கெடுமதிகொண்டு என்னை உண்மையிலேயே கொடுமை செய்யத்தான் துணிந்து விட்டீரா? துரையே!

"மற்றவர்களைக் கண்ட துண்டமாக்கிக் கழுகுக்கும் நரிக்கும் விருந்திட்டு, வெற்றி வெற்றி என்று களிநடம் புரிகிறீர்! வீரனின் பொழுதுபோக்கு என்னைச் சித்திரவதை செய்வதுமா, உமக்கு ஏற்ற வீர விளையாட்டு? "கண்டதுண்டமாக்கிவிட்டால் கவலையில்லை. என்னை உயிருடன் உலவ விட்டல்லவா, ஓராயிரம் ஈட்டிகளால் இதயத்தில் குத்த முனைந்துவிட்டீர். என் கணவர் என்று களிப்புடன் உரிமையுடன், யாரை நான் கண்டு, கண்டு உளம் பூரித்துக் கிடந்தேனோ, அவரை, ஐயோ! வேறோர் மங்கை, என் மணாளன் என்று உரிமையில் கொண்டாடுவதா, அதை நான் எங்கோ ஓர் மூலையில் கிடந்து மகிழ்வதா, நான், வெட்கமும் வேதனையும் பற்றி இழுத்திட பதைபதைத்துப் புரள்வதா? மாளிகையிலும் மலர்த் தோட்டத்திலும், மாலை மதியத்தில் நீரோர் புதியவளுடன் உலவுவது, ஒதுக்கப்பட்டு, விரட்டப்பட்டு, கணவன் உயிருடனிருக்கும்போதே விதவைக் கோலம் பெற்று, நான் விம்மிக் கிடப்பதா!

"அதோ பார், பாவம், ஜோசபைன்! கணவனால் நிராகரிக்கப்பட்டவள் கலங்கித் தவிக்கிறாள், கதியற்றவளானாள், என்று மாதர்கள் என்னைக் கண்டு கசிந்துருகுகிறார்கள். கை கொட்டிச் சிரிப்பதா! அன்பரே!

எத்தனை எத்தனை இளைஞர்கள், என்னைத் தாங்கள் இன்பபுரிக்கு அழைத்துச் செல்வதற்கு முன்பு, என் இதழமுதுக்கு ஏங்கிக் கிடந்தனர், என்பதை அறியமாட்டீரோ? அவர்கள் இன்று, அரண்மனையை விட்டு விரட்டப்படும் என்னைக் காண நேரிட்டால், ஐயையோ! என்னென்ன கேலிமொழி பேசி என்னைக் கொல்வார்களோ! நெப்போலியன் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நாடு பல நடுங்கும் என்று பிறர் கூறக் கேட்டதுண்டு. இதோ, நினைத்ததும் நடுக்கமெடுக்கிறதே! சிப்பிக்குள் முத்தாகி இருந்தேனே! சிரித்துப் பேசினீர் தடுத்துப் பார்த்தேன். காதலை வேண்டினீர்; காலங் கடந்த செயல் என்று எனக்கு நானே கூறிக்கொண்டேன். இதயத்தை வென்றீர்; நானளித்த விருந்தும் நாதா! சுவையற்றதல்லவே! பயனற்றது என்கிறீர், ஓர் பாலகன் இல்லாததால், வெட்கமாகத்தான் இருக்கிறது. எனினும் நமது காதல் வாழ்வு முழுக்க முழுக்க நமக்கே சொந்தம்.



**"என் இதயத்துக்கு இன்பமே! வாழ்வின் ஒளியே! புதிய வையகத்தை எனக்களித்த காதலனே! என்னை விலக்கிவிடத் துணிந்தீர்?..."**

"அதிலே குழந்தை குறுக்கிடுவதையும் கர்த்தர் அனுமதிக்க மறுக்கிறார்போலும் என்றல்லவா எண்ணிக்கொண்டேன். தங்கள் மனம் மட்டும், வேறுவிதமாக எண்ணிடக் காரணம் யாதோ?

"மன்னவா! நமது காதல் வாழ்விலே 'கனி' கிடைக்கவில்லை என்பதாலே கசப்படைகிறீர்! ஒன்று நான் நினைவூட்டுகிறேன். நான் பிள்ளைக் கனி அமுது பெற்றுத் தங்கட்குத் தர முடியாத பாவியாக இருக்கிறேனே தவிர, மலடி அல்லவே! இருவரல்லவா எனக்கு மகன் உளர்! பலர் கூறினாலும் பன்னிப்பன்னிச் சொன்னாலும் பாறை உருகுமா என்று கேட்கிறார்கள் படித்தறிந்தோர்! பாகு மொழியாளே! என்று என்னைக் கொஞ்சு மொழியில் அழைத்து, களத்திலே மட்டுமல்ல, காதல் வாழ்விலே மட்டுமென்ன, - என்று கேட்பது போல என்னுடன் குலவிய

போலந்து நாட்டைச் சேர்ந்த பெண் கவிஞரான வைஸ்லவா ஸைம் போர்ஸ்கா என்பவர் இலக்கியப் படைப்பிற்கான நோபல் பரிசை இந்த ஆண்டு பெற்றிருக்கிறார். அவருக்கு வயது என்ன தெரியுமோ? 73 ஆகிறது!

குணாளரே! என்னைக் கொல்லாதீர்! அபலையாக்காதீர்!

"நான் தாங்கிக் கொள்ள மாட்டேன் வலிவு இல்லை காதல் பொலிவினை இழந்திடத் துணிவு பிறக்காது. உள்ளம் படைத்த எவருக்கும். ஊராளும் உயர் நிலை தங்கட்குக் கிடைத்தாலும் உள்ளத்தில் உறைபவள் என்று யாரை அழைத்து வந்தீரோ, அவளையா, பதவிப் பேய்க்குப் பலியிட வேண்டும்? வேண்டாம், வேந்தே! வேண்டாம்!


"வெந்தழலில் என்னைத் தள்ளிவிட்டு நீர் மணமுள்ள சந்தனத்தை மார்பகத்தே பூசிக் கொள்ளாதீர்! என் கண்ணீரைப் பன்னீராக்கிக் கொள்ளாதீர்! என் காதலைக் கருக்கி அழிக்காதீர்! அத்தாணி மண்டபத்தில், புத்தம் புதிய பவையை அழைத்துக் கொண்டு நீர் 'ராஜநடை' நடக்கும்போது, உம்மோடு வாழ்ந்து, உமக்காகவே வாழ்ந்து உளமாரக் காதலித்து வந்த இந்த அபாக்கியவதி, பொலிவிழந்து மதிப்பிழந்து மரணப் படுகுழியைத் தேடித் தள்ளாடி நடந்து சென்று கொண்டிருக்கிறாள் என்று, உம்மாலே எண்ணாமலிருக்க முடியாது- நிச்சயமாக முடியாது.

"இறையே! அந்த எண்ணம், உம்மைச் சும்மாவிடாது! உமது கிரீடம் முள் முடியாகும்! சிம்மாசனம் சர்ப்பாசனமாகும்! கொலு மண்டபம் கொடுமைக் கூடமாகும்! இதயம் சுக்கு நூறாகும்! ஆம் தூய காதலின் மீது ஆணை, என்னை மோசம் செய்துவிட்டு, உம்மாலே, வாழ்விலே புதிய வாசம் பெற்று மகிழ்ந்திருக்க முடியாது. நாம் இருவரும், ஒருவருக்காகவே ஒருவர் படைக்கப்பட்டிருக் கிறோம்!

"தங்களை இன்று மணாள னாக ஏற்றுக்கொள்ள எவள் வருவதாயினும் தங்களிடம் காதல் கொண்டதால் அல்ல என்பதை, நான் நினைவூட்ட வேண்டுமா! ஒரு பேரரசுக்குக் காவலர் நெப்போலியன்; அவரைக் கடிமணம் புரிந்து கொண்டால், அந்தஸ்தும் அதி காரமும், செல்வமும் செல் வாக்கும் ஏராளமாகக் கிடைக்கும் என்ற எண்ணத்தினாலே மட்டுமே ஓர் ஏந்திழை உம்மை நாடுவாள். நான், தங்களைக் கண்டு மகிழ்ந்தேனே, அதுபோல அல்ல இப்போது உமக்கு வருபவள், அரண்மனையில் உள்ள ஆபரணாதிகளைக் கண்டு மகிழ்வாள். எடுபிடிகள் கைகட்டி நிற்பது கண்டு களிப்பாள். அரச அவையிலே காத்துக்கிடக்கும் கொலுப் பொம்மைகளைக் கண்டு ஆனந்தம் கொள்வாள். உம்மைக் கண்டல்ல. நிச்சயமாக உம்மைக் கண்டு உள்ளத்தை நான் பெற்று மகிழ்ந்தேன். இப்போது வருபவள், உம்மிடம் குவிந்துள்ள உடமைகளுக்காக வருகிறாள்!

---

அரக்கோணத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில், முதல்கட்டமாக ரூ.350 கோடி முதலீட்டில், டயர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைப்பதற்கான ஒப்பந்தம் (MOU) தமிழ்நாடு தொழில்வளர்ச்சி கழகத்திற்கும், தென்கொரிய நிறுவனமான 'கும்ஹோ' டயர் கம்பெனிக்கும், தலைமைச்செயலகத்தில், தலைமைச் செயலர் திரு கே.ஏ. நம்பியார், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது (3.10.96).





“நிலை உயர உயர, நாதா, தங்கள் நெஞ்சிலே இருந்து வந்த காதல் உலர வேண்டுமா! இது எந்த வகையான நீதியோ! களத்திலே கடும் போரிடும் சாதாரணப் போர் வீரனாக இருக்கும்போது மட்டுமே நான் தங்கட்குத் துணைவியாக இருக்கத் தக்கவளோ! கொலு வீற்றிருக்கும் கோமானானதும் வேறோர் கோதைதான் தேவையோ! கார் காலத்துக்கு ஓர் உடையும் வசந்தத்தின்போது வேறோர் வகையான உடையும் அணிகிறோம்; உள்ளத்திலே இடம் பெறும் உத்தமக் காதலுக்குமா, இது? என்னாலே எண்ணிப் பார்த்திடக் கூட முடியவில்லையே! யார் மூட்டிய போதனை? எவரிடம் கற்றீர் இக் கயமையினை? எந்தக் காதகர் கலகமூட்டினார்?

“ஆற்றலரசே! இப்போது உமக்கு வந்துள்ள உயர்வு கண்டு பலருக்குப் பரிவும் பாசமும் சுரக்கும். அது உண்மை என்று எண்ணிடலாமா? விளைந்த காட்டுக் குருவிகளும், மரம் பழுத்ததும் வட்டமிடும் வௌவால்களும், வாடி இருக்கும் கொக்குகளும், வலைகட்டும் சிலந்திகளும், மனித இனத்திலேயும் இருக்கத் தானே காண்கிறோம். இந்தக் கூட்டத்தில் யாரோ தங்கள் மனதை மாற்றியிருக்கிறார்கள். வேண்டாம், வெற்றியால் ஏற்றம் பெற்ற வீரனே! என் உள்ளத்தை வேகவைக்காதீர். என்ன செய்ய முடியும் இந்தப் பேதையால் என்று எண்ணுவீர், களத்திலேயே உம்மை எதிர்த்திட யாருக்கும் ஆற்றல் இல்லை என்றால், கலகலெனப் பொல பொலவெனக் கண்ணீர் சிந்துவதன்றி வேறெதும் செய்யத் தெரியுமா இவளால் என்று எண்ணுவீர், கண்ணாளா! இந்தக் கண்ணீர், நீர் இதுவரை கண்ட படைக்கலம் போன்றதல்ல! இது கன்னெஞ்சக் கோட்டை கட்டிக் கொண்டு அதற்குள்ளே ஒளித்துக் கொள்ளும் வஞ்சகத்தையும் சுட்டுச் சாம்பலாக்கவல்ல ஆற்றல் பெற்றது.

பிதற்றுகிறாள் என்று கேலி பேசாதீர். பித்தம் பிடித்து பாரிஸ்

பட்டினத்து நெடுஞ்சாலைகளிலே நான் பழைய நாட்களை எண்ணிக்கொண்டு, காதல் சிந்து பாடிக் கொண்டு விளக்குக் கம்பங்களைக் கட்டி அணைத்துக் கொண்டும் ஆடை நெகிழ, கூந்தல் சரிய, அலங்கோல நடனமாடினாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை. மலை உச்சியிலிருந்து, கீழே உருட்டி விடப்படும் சிறு மதலையின் கதி என்னாகும்-என் மனம் அந்நிலையன்றோ பெறுகிறதே!"

-இவ்வளவும் இதற்கு மேலும் கேட்கத் தோன்றிற்று; உள்ளத்திலே ஓராயிரம் எண்ணங்கள் கொதித்தெழுந்தன. எனினும் ஜோசபைனால் ஒரு வார்த்தையும் பேசமுடியவில்லை. "ஹா" என்றாள். மயக்க மேலிட்டது கீழே வீழ்ந்தாள். மூச்சுப் பேச்சற்றுக் கிடந்தாள். நெப்போலியனும் திகைத்துப் போனான்.

ஜோசபைனுக்குக் குழந்தை பிறக்கவில்லை; பிரான்சுப் பேரரசுக்கு, இளவரசன் இல்லை!

நெப்போலியன், சக்கரவர்த்தி. நாட்டுக்கு வெற்றியும் கீர்த்தியும் தேடிக் கொடுத்தான். புரட்சி பொசுக்கப்பட்டுவிட்டது. புது முறையை வெட்டி வீழ்த்தியாகி விட்டது. பேரரசனாகிவிட்டான். போர் வீரனாகப் பயணத்தைத் துவக்கிய இந்த ரணகளச் சூரன், பேரரசன், பெற்றுத் தரவேண்டிய மற்றோர் சாதனை உண்டே, பரம்பரை பழக்கப்படி அந்த வெற்றியை நெப்போலியன் தேடித்தரவில்லை. குழந்தை இல்லை. வாரிசு இல்லை!

வல்லமை முழுவதும் செலவிட்டு ஆபத்துக்களைத் துரும்பாக எண்ணிப் போரிட்டுப் பெற்ற பேரரசு, நெப்போலியன் வாரிசு இன்றி இருந்தால், என்ன கதியாகும்? நெப்போலியனுடைய நெஞ்சிலே இந்த நச்சு நினைப்பு நுழைந்தது. வேகமாக வளர்ந்தது. விபரீதமான முடிவுக்கு வந்துவிட்டான். ஜோசபைனை விலக்கிவிடுவது, ராஜகுமாரி ஒருவளை மனைவியாகக் கொள்வது; அவள் தாயாவாள் பிரான்சுக்கு ஓர் இளவரசனை ஈன்றெடுத்தளிப்பாள். பரம்பரை நிலைக்கும். என்று எண்ணினான்.

---



★மொழிப்பற்று இருப்பது
வருந்தத்தக்கதல்ல;
போற்றத்தக்கது.

-அறிஞர் அண்ணா

---

துணிந்து இதை நிறைவேற்றித் தீருவது என்று செயலில் இறங்கி விட்டான். நெப்போலியன் ஒரு முடிவு எடுத்துவிட்டால் தடுத்து நிறுத்த வல்லவர் யார்?

எப்போதுமே புகழொளியைத் தேடித் திரிந்துவந்தவன் நெப்போலியன், பேராசைப் பெரும் பேய், பதவிமோகம், அவன் உள்ளத்தில் தழலாகிக் கிடந்தது. காதல் மட்டுமென்ன, அவன் திட்டத்தின் வெற்றிக்குத் தடையாக இருந்தால், கசக்கி வீசப்படத்தானே வேண்டும்? அதுதான் நெப்போலியன் முறை, அதை அவள் எங்ஙனமறிவாள். அவள் துணைவியாகி அவன் அரசானாக்கப்பட்டதும் அரசியாக விளங்கிய அழகி, ஜோசபைன் தன் கணவர், எதை வேண்டுமானாலும் செய்வார். இதயத்தை வேறு எந்தக் காரியத்துக்கும் இரும்பாக்கிக் கொள்வார். ஆனால் தன்னைப் பொறுத்த மட்டில், அவன் எப்பொழுதும் காதலைப் பொழியும் கண்ணாளனாகத்தான் இருப்பான் என்று எண்ணிக் கொண்டாள்.

பேதையே, பேதையே! பேரரசு அல்லவா இப்போது அவனுக்குப் பெரிதாகத் தெரிகிறது. உன் கண் தந்த கவிதையை அவன் இப்போது கேட்டு இன்புற முடியுமா! சக்கரவர்த்தி நெப்போலியன்! நெப்போலியன் உன்னிடம் காதல் வரம் கேட்டான் காரிகையே இப்போது சக்கரவர்த்தி ஒரு ராஜகுமாரியைக் கேட்கிறான். இளவரசன் வேண்டுமாம்!

பட்டத்தரசன், வாரிசு இன்றியாபோவது, அரசன் மகன் அரசனாக வேண்டும்! அந்த 'ஐதீகத்தை'ப் பாழாக்குவானா? கண்பொத்தினானே கரம் பற்றினானே, என்று எண்ணிக் கிடக்கிறாயே, அவை காதல் விளையாட்டு! சிருங்கார சாஸ்திரம்! இப்போது அவன் 'ராஜ நீதி'யின் படி நடக்கிறான் என்று ஜோசபைனுக்குக் கூறக் கூடியவர்கள் யார்? அவளைச் சூழ இருந்த சுந்தரிகள் யாவரும் திகைத்துப் போயினர். நெப்போலியன் இந்தப் பயங்கர முடிவு எடுப்பான் என்று எவரும் எண்ணவில்லை.



**"என் கண்ணாளனின் காலடியிலே பிரான்சு நாடே கிடக்கிறது; என் கணவன் சுட்டு விரல் காட்டும் திக்கு நோக்கிச் செல்லும் படைச் சூறாவளியிலே சாம்ராஜ் யங்களெல்லாம் சரணாகதி அடைகின்றன!"**

ஜோசபைனுக்கும் நெப் போலியனுக்கும் அறிமுகம் கூட ஆகாதிருந்த சூழ்நிலைதான் முதலில்.

புரட்சி மலர், நல்லாட்சி எனும் மணம் வீசும் என்று கருதப்பட்டது. பிறகு, அது நச்சு மலராகிவிட்டது என்று கூறப் பட்டு, மக்களைக் கட்டுத் திட்டத் துக்கு அடங்கி நடந்திடச் செய்யும் படைத் தலைவர் ஆட்சி புகுந்துவிட்ட நேரம். பாரீஸ் பட்டினத்துப் பதட்டக்காரர் களை அடக்குவதற்காக நெப் போலியன் நியமிக்கப்பட்டிருந்த சமயம்.

அப்போது ஒருநாள், அவன் அலுவலகத்தில், ஒரு வாலிபன், பள்ளி மாணவப் பருவத்தினன். வந்தான். வந்தனமளித்தான். பணிவுடன் ஒரு மனுச் செய்து கொண்டான்.

"என் தந்தை, பெருமைக்குரிய அதிகாரியே! புரட்சிக்காரரால் கொல்லப்பட்டுப் போனவர். அரசியல் அமளிகளில் அக்கரை காட்டாத ஓர் கண்ணியமான குடும்பம், எம்முடையது. ஒழுங்கை நிலைநாட்டும் பேராற் றலால், நாட்டிலே அமைதியை ஏற்படுத்திய தங்களிடம் நான் வேண்டுவதெல்லாம், என் தந்தையாரின் உடைவாள் திருப்பித் தரப்பட வேண்டும். எம்மிடம், என்பதுதான். அவரு டைய வீரவாள், எங்கள் குடும்பக் கீர்த்திக்கோர் சின்னம்! அந்தக் கருவூலத்தை மீட்டுக் கொண்டு வரும் பணியில் மகன் நான் ஈடுபட்டேன். அருள் கூர்ந்து, வாளைத் திருப்பித் தர உத்தரவளிக்கக் கோருகிறேன்" என்றான் வாலிபன். சிறுவ னென்றே கூறத்தகும் பருவத் தினன்.

நெப்போலியன், வாளைத் தந்தான். முழங்காற்படியிட்டு, அதைப் பெற்றுக் கொண்ட அந்தச் சிறுவன் அதனை மார்புறத் தழுவினான். கண் களிலே அதனை ஒத்திக் கொண்டான். நெஞ்சு நெக்குருக அதனை நோக்கினான். களிப்புக் கண்ணீர் வழிந்தது. நெப்போலி யனுக்கு ஆச்சரியமாக இருந்தது. தந்தையின் உடைவாளைத் தனயன் இவ்வளவு போற்றிப் பூஜிக்கிறானே! குடும்பக் கீர்த்தியிலேதான் இவனுக்கு எவ்வளவு பற்று எத்துணைப் பெருமை! மிக உயர்தரமான குடும்பமாக இருக்க வேண்டும். இத்துணை மாண்பு பெறும் வகையில் இவனை வளர்த்துள்ள மாதா, வணங்கப்படத்தக்கவள், என்று எண்ணினான்.

அவளைக் கண்டான்; காதலிக்கத் தக்கவள் என்று உணர்ந்தான்.

ஜோசபைன், கணவனிழந் தவள். கண்ணின் மணிகள் போல் இரு புதல்வர்களுடன் எளிய, ஆனால் பிறர்கரம் எதிர்பாராத நிலையில் வாழ்ந்து வந்தாள்.

அவளுடைய கவர்ச்சியை, விதவைக் கோலம் குலைத்து விடவில்லை; கட்டழகு கெடாத நிலையில், ஆயினும் கண்வலை வீசாக் காரிகையாக அவள் வாழ்ந்து வந்தாள். அந்தக் கவின்மலரைக் கண்டான் நெப்போலியன். உள்ளத்தை அர்ப்பணித்தான்.

அவன் அங்கு சென்றது, ஒரு மூதாட்டியைக் காண. முதுமைக்

"கார்னர் டிக்கட்டா இரண்டு கொடுங்க?" என்று திரையரங்கில் கேட்டதன் விளைவு!





சென்னையில், பொதுவிநியோகத் திட்டச் சீரமைப்பு விழாவில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையத்தைத் தொடங்கி வைத்தார். அருகில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு வே. தங்கபாண்டியன் ஆகியோர் உள்ளனர் (25.9.96).

ஜோசபைன், தன் 'இல்லற ஜோதி'யாகக் கிடைக்க வேண்டுமென்று, மனுவிட்டு நின்றவன் தான் இதே நெப்போலியன். அவள், இவனை அங்காடியில் சந்தித்து மயக்கினவளல்ல. மலர்ச் சோலையில் கண்ணில் பட்டுக் கருத்தில் சென்று நுழைந்தவளல்ல. ஜோசபைன், இருக்குமிடம் அறிந்து சென்று, முகமன் கூறி, மறுத்துவிடக் கூடாது என்று மண்டியிட்டு, அவளை மணமுடித்துக் கொண்டவன், இந்த நெப்போலியன்.

அந்த ஜோசபைனைப் பெறுவதற்கேற்ற சூழ்நிலை அமைந்த கட்டமே, பாவலர்கள் கருத்துக்குச் சுவைதரும் காவியம் போன்றது.

இதோ, துவண்டு வீழ்ந்து கிடக்கிறாள், காதலன் காலடியில், வேறோர் அரண்மனையில், தாதியர் புடைசூழ ஓர் அரசிளங்குமரி, அலங்காரவதியாகிக் கொண்டிருக்கிறாள். கொடியவனுக்கு மனையாட்டியாவதற்காக. பிரான்சு சக்கரவர்த்தினியாவதற்காக!

கீழே, மூச்சுப் பேச்சற்றுக் கிடக்கும் காரிகை, இந்தக் களம் சுற்றிக் கடும் போரிடும் கன்னெஞ்சுக்காரனுக்குத் தன் இதயத்தைக் காணிக்கையாக்கித் தந்தாள்! வரப் போகிறாள் வேறோர் வனிதை, அரண்மனையில் வளரும் அலங்காரப் பொம்மை, காதலை அளிக்க அல்ல. 'வாரிசு' பெற்றுத்தர!

பிரான்சு நாட்டுப் பெரிய அதிகாரிகள், ராஜதந்திரம் அறிந்தவர்கள். பெண் கேட்கச் சென்று, அந்த 'அன்னத்தை'க் கொண்டு வரப்போகிறார்கள். இதோ, சிறகொடிந்த மாடப் புறா கீழே சாய்ந்து கிடக்கிறது. நெப்போலியன் இந்தப் பேசும் புறாவைக் கொள்ளப் பேசாதனவெல்லாம் பேசினான், முன்பு.

நெப்போலியன், ஜோசபைனிடம், கூறினான்.

"சாம்ராஜ்யத்தின் நலனுக்காக, சரசாங்கி! நான் உன்னை விலக்கிவிட்டு வேறோர் அரச குடும்பத்து அணங்கைத் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்துவிட்டேன். பிரான்சுக்கு ஓர் இளவரசன் தேவை, அவனை அளிக்கும் கடமை எனக்கு இருக்கிறது" என்றான்.

கோலத்தில் ஜெபமாலையை உருட்டிக் கொண்டு கிடக்கும் அம்மையைக் காணச் சென்றான். அழகு மயிலைக் கண்டான்! மாண்புள்ளவன் உன் மகன்! மண்டிலம் அவன் போன் றோரை அளித்திடும் மாதர் களுக்குக் கடமைப்பட்டிருக்கிறது என்று முகமன்கூறச் சென்றான். அவன் கண்டதோ விரித்தாடா விடினும், கலாபத்தை இழக்காத நிலையில் உள்ள மயிலாளை! முகமன் கூறச் சென்றவன், காதல் பேசிடும் நிலை பிறந்தது.

அவள் அவனை உடனே ஏற்றுக் கொள்ளவில்லை.

ஈராண்டு மூத்தவள் அவனினும்; இரு புதல்வர் களுக்குத் தாய்; எனவே, போர் வீரனுடைய காதலை ஏற்றுக் கொள்வதா, எத்தனையோ அலைகள் இதுபோல எழும் என்று கருதி அலட்சியமாக இருந்துவிடுவதா என்று அமைதி யாக இருந்தே எண்ணிட முடிந்தது. முடிவில் தன்னை நெப்போலியனுக்கு அர்ப் பணித்தாள்.

களத்திலே கடும்போரிட்டுக் களைத்துப்போய், இரவு படுக்கப் போகும்போது கூட, நெப் போலியன், ஜோசபைன் பற்றிய நினைவு கொண்டு, காதற் கடிதங்கள் தீட்டுவான். அவ் வளவு பிரேமை அவனுக்கு. இதோ வெட்டிச் சாய்த்து விட்டான். பட்டத்தரசியாக வேறோர் முகவெட்டுக் காரியைப் பெறத் திட்டமிட்டு விட்டான்.

நெப்போலியன், தன் 'பிர தாபத்தை'ப் பெரிதாக்கிக் கொள்வதற்காகக் கொடுமை பல புரிந்தான் என்று வரலாற்றுச் சுவடியினர், காரணம் பல காட்டிக் கூறுகின்றனர். அவன் செய்த எல்லாக் கொடுமை களிலும் ஜோசபைனுக்கு அவன் இழைத்த துரோகம் போன்றது வேறெதுவு மிராது.

ஜோசபைன், அரண்மனையை விட்டு வெளியேற வேண்டிய நாள் குறிக்கப்பட்டுவிட்டது. அதற்கான உத்தரவு பிறந்து விட்டது.

கண்ணீருக்குக் கட்டுப்படுபவ னல்ல. பேராசைப் பேய்க்கு இடமளித்துவிட்ட நெப்போலியன் -பேரரசன்!



**"ஒதுக்கப்பட்டு, விரட்டப் பட்டு, கணவன் உயிருடன் இருக்கும்போதே விதவைக் கோலம் பெற்று நான் விம்மிக் கிடப்பதா?"**

நீண்டதோர் அங்கியால் தன்னை முற்றிலும் மறைத்துக் கொண்டாள் அந்த மாதரசி.

அரண்மனைப் பணிப் பெண்கள், அழுத கண்ணின ராய், மாடிப்படியில் நின்றனர்; ஏதும் பேசவில்லை. பேசும் நிலையில் இல்லை. செல்கிறேன் என்று கரமசைத்தாள். அரண் மனை விட்டு வெளியே வந்தாள்.

ஆறு குதிரைகள் பூட்டப்பட்ட வண்டி அவளுடைய பயணத் துக்காகக் காத்துக் கிடந்தது. ஏறினாள். சென்றாள். இதயத்தைத் தந்தவள், இதயமற்றவனுடைய கொடுமையைச் சுமந்துகொண்டு சென்றாள். அந்த நாளை, யார்தான் நினைக்கும்போது நெஞ்சு நெக்குருகாமல் இருக்க முடியும்.

ஜோசபைன், மனம் குமுறி னாள் வேறென்ன செய்ய முடியும்? நெப்போலியனை, எதிர்த்தோர்தான் பிழைக்க முடியாதே! அதிலும் இவளோ, பாவம், பெண் பேதை, என் செய்வாள்!

சுடச்சுடப் பேசவும், அவனு டைய சூது மதியினைச் சாடவும், அவளுக்கு உரிமை உண்டு. எனினும் அவள், இதயத்தை அர்ப்பணித்துவிட்டவள், எனவே, தாங்கிக் கொண்டாள். கொடு மையைத் தாங்கிக் கொள்வோம், காலம் பாடம் புகட்டட்டும் என்று எண்ணிக் கொண்டாள் போலும்.

புதிய சக்கரவர்த்தினி கொலு மண்டபம் நுழைந்தாள். ஆஸ்திரிய நாட்டு அரச குமாரி மேரி லூரசியா - கொலுமண்டபம்தான் நுழைந்தாள். கொற்றவன் நெஞ்சிலல்ல.

நெப்போலியன் பெற்ற புகழொளியை அவள் தன் மாளிகைக்கு மணிவிளக்காக்கி மகிழ்ந்தாள். கண்களிலே காதல் ஒளி பூத்திடவில்லை.

அவள் கடமை, பட்டத்தரசி யாக இருப்பதுதானே! அதை அவள் வாய்ப்பு இருந்தவரை யிலே செய்தாள்.

நெப்போலியனுக்கு இறங்கு முகம் கண்டது. மேரி, அவனை விட்டு அகன்றுவிடத் துணிவு பெற்றாள். நெஞ்சில் இடமளித் திருந்தால்தானே, அகற்றிவிட இயலாது. மேரிக்கு அந்தச் சங்கடம். சஞ்சலம் எழவில்லை.

நெப்போலியனுடைய வீழ்ச்சி,

எழுச்சியைவிட வேகமாக உரு வெடுத்தது.

தொட்டதெல்லாம் கெட்டிடக் கண்டான்; திக்கெலாம் பகை முண்டிடக் கண்டான்; வெற்றி யன்றி வேறு அறியாத படை, நிலைகுலையக் கண்டான். ரஷ்ய நாட்டுக் கடுங்குளிர் கொட்டிடக் கண்டான்; கொற்றம் அற்று வீழ்ந்து விடும் என்று ஆருடம் கூறினர்; மற்றுமோர் தீரமான தாக்குதல். மகத்தான ஒரு வெற்றி, மீண்டும் புகழொளி ஓங்கும் என்று எண்ணி எண்ணி ஏமாந்தான். நொந்த உள்ளத் துடன் கிடந்தான்_ வெந்த உள்ளத்துடன் காட்டு மலர் போல வாழ்க்கையை நடத்திவந்த ஜோசபைன் தன் காதற் கணவர்க்கு வந்துற்ற கதியறிந்து கசிந்து கண்ணீர் மல்கினாள். அவனும் அரசபோகம், அது ஊட்டிய அகந்தை, அதன் காரணமாகப் புதுப்பெண்ணைத் தேடிய அக்ரமம், அந்த அக்ரமத் திட்டத்துக்காக ஆசைக்கினிய வளைத் துரத்திய கொடுமை இவைகளை எண்ணினான். கலங்கியறியாதவன், கலங் கினான்.

ஜோசபைனுக்குத் தன் நிலை குறித்துக் கடிதமும் அனுப் பினான்.

அன்று, அரண்மனை மாடி யிலிருந்து இறங்கியபோது அடைந்ததைவிட அதிகமாக வருத்தமுற்றாள், ஜோசபைன்.

ஐயோ! அவருக்கா இந்தக் கதி? அவனி புகழப் பவனி வந்தவருக்கா இந்த நிலை? என்றெல்லாம் எண்ணித் துக்_ கித்தாள்.

'பறந்தோடி வருவேன். தங்கள் பக்கமிருந்து பணிவிடை புரிவேன். தங்கள் துக்கத்தைப் பங்கிட்டுக் கொள்வேன்,



'தனிமையில் உண்மை காணல்' என்பதற்குப் பொது விவகாரங்களில் பங்கேற்கக் கூடாது என்று அர்த்தமல்ல; நாம் அதைச் செய்தேயாக வேண்டும். அப்பணியை அந்தந்த உணர்வில் செய்ய வேண்டும்.

துரையே! என்னால் முடியும், என் இதயம் அதற்கு இட மளிக்கும். ஆனால், உலகம் என்ன கூறும்? உரிமை கொண் டவன் வேறொருவள் இருக் கிறாளே, உதறித் தள்ளப்பட்ட நான், தங்களிருப்பிடம் வருவது முறையாகாதே. இதை எண்ணியே கலக்கம் அடைகிறேன்'_ என்ற கருத்துப்பட, கடிதம் அனுப்பவும் அந்தக் காரிகைக்கு நற்பண்பு இருந்தது. இவ்வளவு கொடுமை களை இழைத்தவனிடம், கொண்ட காதலை அவள் மறந்தாளில்லை.

நெப்போலியன், பொறியில் சிக்கிய புலியானான். பொறி பலமானது மட்டுமல்ல. புலியின் பல்லும் நகமும்கூடச் சுடர் மழுங்கிவிட்ட நிலை.

எல்பா என்னும் இடத்தில் நெப்போலியன் இருக்கிறான் - வலிவிழந்து, பொலிவற்று, இருள் சூழ்ந்த நிலையில்.

ஜோசபைன், நோய்வாய்ப் பட்டுக் கிடக்கிறாள். நாளெல்லாம் அவன் நினைப்பு போலும். இரவெல்லாம் பழைய நாட்கள் பற்றிய கனவு போலும். மெலிந்து கிடந்தாள். பூங்கொம்பு பட்டுப் போகும் என்பது தெரிந்து விட்டது.

அங்கு எல்பாவில் நெப் போலியன், மீண்டும் இவன் எழுவது ஏது! 'அணைந்தது இவன் ஆதிக்கம்!' என்று பலரும் கூறிடத்தக்க நிலையில் கிடக் கிறான்.

நெப்போலியன், எல்பா சென்று நான்கு கிழமைகள் நகர்ந்தன. நோய், ஜோசபைனை அரித்து விட்டது _ மனோகரமான ஓர் மாலை, ஜோசபைன் உயிர் பிரிந்தது.

உயிர் பிரியும் போது, அவளு டைய உள்ளத்திலே நெப்போலி யனின் நினைவு, கரத்திலே நெப்போலியன் உருவம் பொறிக் கப்பட்ட பதக்கம், உதட்டிலே, ''நெப்போலியன்!... எல்பா... நெப்போலியன்!''

- 'பூம்புகார்' வெளியீடான 'செங்கரும்பு' நூலிலிருந்து

# தெரிந்துகொள்ளுங்கள்



★ இந்தியாவில் உத்திரப் பிரதேசம், பீகார், அரியானா, அருணாசலப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் வாழும் பெண்களே அதிக அளவில் கருத்தரிக்கின்றனர். அதிகக் குழந்தைகள் பெறும் கணக்கில் உத்திரப்பிரதேசப் பெண்களே முன்னிலை வகிக்கின்றனர். அங்கே ஒரு பெண்ணுக்கு 4.8 என்ற கணக்கில் குழந் தைகள் உள்ளனவாம்!




★ தமிழ்நாட்டில் உள்ள 3200 கிராமங்களுக்குப் புதிதாகத் தொலைபேசி இணைப் புகள் தரப்படவுள்ளன. இதில், ஓர் அழைப்பிற்கு 50 காசு மட்டுமே வசூலிக்கப் படும்!

★ வெள்ளைப் பூண்டு, புற்று நோயைத் தடுக்குமாம். பெரியவர்கள் ஒரு நாளைக்கு 10 கிராம் பூண்டு சாப்பிட்டுவந்தால் புற்று நோய் வராமல் தடுக்கலாம் என்று தைவான் மருத்து வர்கள் அறிவித்திருக் கிறார்கள்.



★ பெண் கல்வி இங்கு மட்டுமல்ல வளரும் நாடு களிலும் வளராமலே இருக் கிறது என்று தெரிவித் திருக்கிறது யூனிசெப் நிறுவனம். பெரும்பாலான வளரும் நாடுகளில் ஆண் களுடன் சேர்ந்து படிக்கும் பெண்கள் மரியாதைக் குறைவாக நடத்தப்படு கின்றனர். இனக் கவர்ச்சி முக்கிய இடம் வகிக்கிறது. கல்விக் கூடங்கள் வெகு தூரத்தில் அமைந்திருப்பதும் இதற்குக் காரணம். இதை உணர்ந்து, தக்க நடவடிக் கைகள் மேற்கொண்டு மகளிர் மேம்பாடு பெறச் செய்யவேண்டும் என்றும் அந்தச் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. பெண் களுக்கு எதிரான குற்றங்கள் அண்மைக் காலமாக ராஜஸ் தானில்தான் அதிகரித்து வருகிறது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.



★ ரஷ்ய விண்வெளி ஓடம் மூலம் 188 நாட்கள் வானவெளியில் வலம்வந்த வீராங்கனை சான்னோன் லூசிட் என்பார், அதே அட்லாண்டிஸ் ஓடத்தில் பூமிக்குத் திரும்பினார். அவருக்கு வயது 53.



★ குறிஞ்சிப் பாட்டில் 99 வகைப் பூக்கள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை யாவையும் சேகரித்துப் பதப்படுத்தப்பட்டு, சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்படும். அப்பூக்களின் தற்போதைய பெயர், அறிவியல் பெயர் ஆகிய வையும் அத்துடன் குறித்து வைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# வடலூர் வள்ளலாரின் மானிட தர்மம்



**வ**டலூர் இராமலிங்க அடிகளார், மானுட தர்மத்தின்படி ஒழுகுதல் வேண்டும் என்று, தன்னை மானிட தர்மத்திற்கொப்ப உலகம் அறியா இளைஞராக இருக்கும்போதே மாற்றிக்கொண்ட பெருமான் ஆவார்.

உயிரில் உயர்ந்தது தாழ்ந்தது என்பதில்லை! வலியோன் எளியோனை அடக்கியாள்வது தகுமா? சாதியெனும் மடைமையினால் மானிட தர்மம் தகர்க்கப்படுவது நீதியாகுமா? என்று எடுத்தியம்பிச் சுட்டிக் காட்டியவர் அவர்.

வள்ளல் இராமலிங்க அடிகளாரின் அன்புள்ளம் ஏழை எளியவர்களுக்காக எப்படி வாட்டமுறுகிறது பாருங்கள்

**"சோடில்லை மேல்வெள்ளைச்**
**சொக்காய் இல்லை நல்ல**
**சோமன் இல்லை**

**பாடில்லை கையில்**
**பணமில்லை தேகப்**
**பருமனில்லை**

**வீடில்லை யாதொரு வீறாப்பும்**
**இல்லை விவாகமது**
**நாடில்லை நீ நெஞ்சமே! எந்தவாறு**
**இனி நண்ணுவையே!"**

என்று ஏழ்மையை மனம் வெதும்பிக் கூறுகிறார். இக்கருத்து எவ்வளவு ஆழமாக வறுமையில் உழலும் பிற உயிர்களின் நிலையினை அகழ்ந்தெடுத்து உணர்ந்து தன்னையும் உட்படுத்தி விவரிப்பது மனித சமுதாயச் சீரழிவுதனை வெட்ட வெளிச்சமாகக் காட்டுகின்றது.

ஏற்றத் தாழ்வுகளைக் காணச் சகியாத அக்காருண்யமூர்த்தி, ஏழ்மையின் நிலையினை வலிமையானவர்கள் எப்படித் தனக்கு அடக்கமாக அடக்கி வைத்துள்ளனர் என்பதையும் நமது மனக் கண்முன் நிழல்படமாக எடுத்துக் காட்டுகின்றார்.

**"வட்டிமேல் வட்டிகொள்**
**மார்க்கத்தில் நின்றீர்**
**வட்டியை வளர்க்கின்ற**
**மார்க்கத்தை அறியீர்**
**பெட்டிமேல் பெட்டிவைத்**
**தாள்கின்றீர் வயிற்றுப்**
**பெட்டியை நிரப்பிக்கொண்**
**டாட்டியுள் இருந்தீர்**

**பட்டினி கிடப்பாரைப்**
**பார்க்கவும் நேரீர்**
**பழங்கஞ்சி ஆயினும்**
**வழங்கவும் நினையீர்**
**எட்டிப்போல் வாழ்கின்றீர்**
**கொட்டியினைப் போல**
**எத்துணை கொள்கிறீர்**
**பித்துல கீரே!"**

வட்டிமேல் வட்டி வாங்கி, பெட்டி நிறையப் பூட்டி வைத்துக்கொண்டு தான் மட்டும் உண்டு உடுத்தி ஏகபோக வாழ்க்கை வாழும் தனவான்களே!

பட்டினியாய் வாழும் பாமர மக்களுக்குப் பசியாற பரிமாற வேண்டாம் பழைய கஞ்சியையாவது ஊற்றி அவர்களுடைய பசியை ஆற்றவாவது நினைத்ததுண்டா?

இதுபோன்று எளியவரை வதைப்பதினால் கடைசியில் கொண்டுபோவதுதான் என்ன?

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

★பேதம் என்றால் உருவ பேதம் அல்ல; நடப்பிலும் நட்பில் ஏற்படும் பயனிலும் உள்ள பேதமேயாகும்.

**-தந்தை பெரியார்**

எட்டி மரம் காய்த்துப் பழுத்தாலும் சரி கொட்டியைப் போன்று ஆழப் பரந்து தர்மத்தை உணராத மாக்களாக இருப்பதினால் உலகத்திற்கு என்ன பயன்? என்று வள்ளலார் வினவியுள்ளார்.

வடலூர் வள்ளல் பெருமான் பிறரைச்சாடும் அதே சமயம் அவர்கள் திருந்திடல் வேண்டும் என்னும் நோக்கில் தன்னுள்ளத்தின் வாட்டத்தையும் வெளிக்கொணர்ந்து வருத்திக் கொள்கின்றார்.

ஏற்றத்தாழ்வுகளைப் பொறுக்கமுடியாத காருண்யமூர்த்தி மானிட வர்க்கத்தில் எத்தனைப் பிரிவுகள்? இதனால் மனிதருக்கு என்ன நன்மை? சாதி சமய சச்சரவுகளினால் ஏற்படுகின்ற அவலங்களை எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? என்றெண்ணித் தன்னுடைய உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகின்றார்.

**சாதியிலே, மதங்களிலே**
**சமயநெறிகளிலே,**
**சாத்திரச் சந்தடிகளிலே**
**கோத்திரச் சண்டைகளிலே**
**ஆதியிலே அபிமானத்து**
**அலைகின்ற உலகீர்!**
**அலைந்து அலைந்து**
**வீணேநீர் அழிதல்**
**அழகலவே!..."**

"ஆதியில் உண்டாக்கிய சாதி சமய சாத்திரங்களிலே மனதைச் செலுத்தி வீணே அமைதியுற்று அலைவதனால் என்ன பயன்? அதனால் கண்ட பயன் என்ன? இதையெல்லாம் விடுத்து சன்மார்க்கத்தின்பால் மனதைச் செலுத்தி தெளிவினைப் பெற்றுத் தெளிந்திடுவீர்!" என அறிவுறுத்தி அழைக்கின்றார் வள்ளலார்.

வள்ளல் பெருமான் ஆன்மீக வாதியாக இருந்தாலும், நாட்டு மக்களின் நலனில் மிகவும் அக்கறை கொண்டவர் என்பதை அவரது பாடல்களின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

ஆகையால் மாசற்று மானுட தர்மத்தைக் கடைப்பிடித்தவர் வள்ளல் இராமலிங்கப் பெருமானாரேயாகும்.

மனித சமுதாய ஏற்றத் தாழ்வினால், பணம் படைத்தோர் படாடோபமாக வாழ்ந்து, பணமற்ற பாமர மக்கள் வசதியற்று வறுமையினால் வாடிடுவதைக் கண்டு வள்ளலாரின் பஞ்சு நெஞ்சம் பற்றி எரிவதைப் பாடலின் வாயிலாக எப்படி வெளிப்படுத்துகின்றார், பாருங்கள்

**"உள்ளலேன் உடையார் உண்ணவும்**
**வறியார்**



**"ஹலோ, வெண்ணெய்க் கடைக்காரர் தானே பேசறீங்க? என்ன இது அரை கிலோ வெண்ணெய் கேட்டனுப்பினா என் பையன்கிட்டே கால் கிலோதான் கொடுத் தனுப்பியிருக்கீங்க!"**

**"அரை கிலோதானே கொடுத்தனுப்பினேன்; சரியா நிறுத்துப்பாருங்க!"**

**"பார்த்துட்டுத்தான்யா பேசறேன், குறைவாகத்தான் இருக்கு!"**

**"அப்ப இனிமே ஒண்ணு செய்யுங்க; வெண்ணெய் வாங்க வர்றதுக்கு முன்னேயும், வாங்கிட்டு வந்தப்புறமும் ஒங்க பையனை ஒருதரம் எடை போட்டுப்பாருங்க, உண்மை தெரியும்!"**

**உறுபசி உழந்துவெந் துயரால்**
**வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ**
**மற்றிதை நினைத்திருந் தோறும்**
**எள்ளலேன் உள்ளம் எரிகின்ற துடம்பும்**
**எரிகின்ற தென்செய்வேன் அந்தோ!**
**கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன்**
**இந்தக்**
**குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்!"**

வசதி படைத்தோர் உண்டு கொழுப்பதும், வசதியற்றோர் வாடித் துயர் உறுவதும் என்னேகொடுமை? இக்கொடுமைகளை எப்படிப் பார்த்துக் கொண்டிருப்பது?

இக்கொடுமையைப் பார்க்குங்கால் என் உள்ளமும் உடலும் எரிகின்றதே என் செய்வேன்? இக்குறைகளை உடனடியாக அகற்றிடல் வேண்டும் என்கிறார் வள்ளல் பெருமான்.

ஆன்மீகப் பெரியோர்கள் பலரும் வறுமையைச் சாடியிருக்கிறார்கள். ஆனால் வள்ளலார் மட்டும் வறுமையின் கொடுமையைக் கண்டு தன்னுடைய நெஞ்சும் உடலும் எரிகிறது என்கிறார்.

பிறர் படும் துயரை தான் படும் துயராக நினைத்து வேதனைப்படுகிறார் என்றால், வள்ளலாரின் மாசற்ற மானிட தர்மத்தை நம்மால் உணர முடிகிறதல்லவா!

**-வடலூர் இராமலிங்கர்**
**பிறந்தநாள் நினைவாக...**

'கார்த்திகா பப்ளிகேஷன்ஸ், வடபழனி, சென்னை 26 வெளியிட்டுள்ள அருட்பெருஞ்சோதி வள்ளலார்' என்ற நூலிலிருந்து.

# 'சென்னை'க்கு டில்லி ஒப்புதல்



★ மைய அரசு, 'மெட்ராஸ் சிட்டி' என்னும் பெயரை 'சென்னை' என்று மாற்றி அழைப்பதற்குத் தனது இசைவினை அளித்துள்ளது.

★ மாநில அரசும், 'மெட்ராஸ்' சிட்டி என்ற பெயரை மாற்றி, 'சென்னை' என்று 30.9.96ஆம் தேதியிலிருந்து அழைக்கப்படவேண்டும் என்பதற்கான அறிவிக்கையினை 30.9.96 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிட்டுள்ளது.

★ இதற்கான அரசு ஆணை எண் 1002 ஆகும்.



"ஏடாயிரங் கோடி
எழுதாது தன்மனத்து
எழுதிப் படித்த விரகன்"

ஆவார். சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், சேயூர்க் கலம் பகம் என்பன போன்ற பன்னூல்களைப் படைத்துத் தந்துள்ள பாவலர் அவர். ஒரு பொருளுடைய பல சொற்களைக் கொண்டு பாடல் இயற்று வதிலே பேராற்றல் மிக்கவராக விளங்கிய கவிராயர் இராமன் என்னும் வள்ளலைக் காணச் சென்றிருந்தார்.

அவ்வள்ளல் யானையைப் பரிசாக வழங்கினான் அவருக்கு. அப்பரிசினைப் பெற்றுக்கொண்ட கவிராயர், உடனே ஒரு பாடல் பாடித் தம்முடைய புலமையினை அவ் வள்ளலிடம் காட்டினார். பாடல், அவர் தம் மனைவியிடம் கூறுவது போன்று அமைந்துள்ளது.

பாணன் மனைவியாகிய பாடினி இவரை நோக்கி, "பாணரே! இந்நில உலகையும் விண்ணுலகையும் தனது புகழுக்கு எல்லையாக உடைய இராமன் என்னும் வள்ளலைப் பாடி நீர் என்ன கொண்டு வந்தீர்? என்றாள். நானோ, புதியதாகிய 'களபம்' என்றேன் அவளோ சந்தனம் என்று புரிந்துகொண்டு, 'உடலிலே பூசிக்கொள்ளும்' என்று மொழிந்தாள், 'யானை' என்ற பொருள்படும் மற்றொரு சொல்லாகிய

# இலக்கியத்தில் சொல்லாடல்!

## முனைவர் நெல்லை ந. சொக்கலிங்கம்

**பா**லாற்றங்கரையில் உள்ள பூதூரில் ஒரு புலவர் தோன்றினார். பிறக்கும் போதே அவருக்குக் கண்பார்வை இல்லை. பிற்காலத்தில் சிறந்த பெருங்கவிஞராக அவர் விளங்கினார். எனவே அக்கவிஞர் பெரு மகனைப் பொதுமக்களும் சான்றோர்களும் அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்றே சிறப்பு அடைமொழி கொடுத்து அழைக் கலாயினர். அவர்,

'மாதங்கம்' என்று சொன்னேன். அவள் அதை 'நிறை பொன்' என்று கருதி, 'நாம் வறுமையில் இருந்து தப்பிப் பிழைத்தோம்; இனிமேல் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்வோம்!' என்று மகிழ்ந்து கூறினாள். நானோ எழுச்சியில் சிறந்த 'வேழம்' என்று சொன்னேன். என் மனைவி அதனைக் 'கரும்பு' என்று கருதிக் கொண்டு 'தின்னுங்கள்' என்று விரைந்து சொன்னாள். இன்னும் என்




கருத்தை உணர்ந்து கொள்ளவில்லையே என்றெண்ணிப் 'பகடு' என்றேன். அவள், அதைக்கொண்டு வயலை உழவு செய்யுங்கள் என்றாள். நான் 'கம்பமா' என்றேன் அவள் 'கம்பு மாவு' என்று கருதிக்கொண்டு 'நல்ல கனியாகச் செய்யலாம்' என்று நவின்றாள். 'கைம்மான்' என்று சொன்னேனோ இல்லையோ, என் மனைவி ஒன்றுமே மறுமொழி பேசாமல் திகைத்துப்போய் நின்றாள்.

இதுவே, அந்தகக் கவி வீரராகவ முதலியார் பாடியுள்ள பாடலின் கருத்தாகும். இப்போது நாம் அக் கவிராயரின் பாடலைக் காண்போமா?

சொன்னாலும் வாய்மணக்கும் அப்பாடல்:

**"இம்பர்வான் எல்லை இராமனையே பாடி**
**என்கொணர்ந்தாய் பாணா நீ?' என்றாள்**
**பாணி;**
**'வம்பதாம் களபம்' என்றேன்; 'பூசும்'**
**என்றாள்;**
**மாதங்கம் என்றேன்; 'யாம் வாழ்ந்தேம்'**
**என்றாள்;**
**'பம்புசீர் வேழம்' என்றேன்; 'தின்னும்'**
**என்றாள்;**
**'பகடு' என்றேன் 'உழும்' என்றாள்**
**பழனந் தன்னைக்**
**'கம்பமா' என்றேன் 'நற்களியாம்' என்றாள்;**
**'கைம்மா' என்றேன் சும்மா கலங்கினாளே!"**

-கவிராயரின் மேற்கண்ட பாடலில் யானைக்குரிய பெயர்களாகிய களபம், மாதங்கம், வேழம், கம்பமா, கைம்மா போன்ற சொற்களுக்கு முறையே சந்தனம், பொன், கரும்பு, எருமை, கம்பமாவு போன்ற வேறு பொருளும் உண்டு என்பதனை அறிந்து இன்புறுகின்றோம். இவ்வாறு இராமன் கொடுத்த பரிசினைப் பெற்றுக்கொண்ட புலவர் சொல்லழகு தோன்றக் கூறும் பாங்கும், சுவைமிகு சொல்லாடலும் எண்ணி மகிழத்தக்கதாகும்.




# பார்வை ஒன்றே போதுமே!



வார்த்தைகளுக்கு
வாலிபம் அதிகம்
வலிமையும் அதிகம்!

வார்த்தைகள் நெருப்புக் குவியல்கள்
அவைபட்ட இடம் புண்ணாகும்
தொட்ட உதடு சூடாகும்!



லேசான இதயம் கூட
வார்த்தைகள் பட்டால் கனமாகும்!


காசைச் சேமித்தால்
கனவுகள் அதிகமாகும்
வாழ்நாள் குறையும்!
வார்த்தையைச் சேமித்தால்
நிம்மதி கைகூடும்
ஆயுள் அதிகரிக்கும்!



சொல்ல நினைப்பதைச்
சொல்ல நினைக்கும்போது
சொல்லாமல் இருப்பது
மன உறுதியைச் சொல்லும்!

அன்பின் பிரதிபலிப்பை
எடுத்துச் சொல்ல
ஆயிரம் வார்த்தைகள் தேவையில்லை.
ஆறுதலாய் ஒரே யொரு பார்வை போதும்...!

— பால சாண்டில்யன்.



# நூல்நயம்

## புதிய சிந்தனைகள் - முதல் பகுதி

ஆசிரியர்: **இராம. வீரப்பன்**
வெளியீடு: ஆழ்வார்கள் ஆய்வு மையம்
29, திலக் தெரு
தியாகராய நகர்
சென்னை 600 017

பக்கம்: 240 விலை: ரூ.60

முன்னாள் அமைச்சர் திரு ஆர்.எம்.வீ. அவர்களின் எழுபத்தோராவது பிறந்த நாளையொட்டி வெளியிடப்பட்டுள்ள நூலாகும் இது. அவர் பல்வேறு நிகழ்ச்சி களில், பல்வேறு சூழ்நிலைகளில், ஆற்றிய உரைகள், எழுதப்பட்ட கட்டுரைகள், முன்பு பல தலைப்புகளின் கீழ் வெளிவந்துள்ளன; அவற்றின் ஒட்டுமொத்தத் தொகுப்பே இந்த நூல். இரண்டு பகுதிகளாக வெளிவந்துள்ளன. இரண்டாம் தொகுப்பு 201 பக்கங்கள் உடையது; அதன் விலை ரூ.50.

## சிறகை விரித்த சிந்தனைகள்

ஆசிரியர்: **முனைவர் கடவூர் மணிமாறன்**
வெளியீடு: விடியல் வெளியீட்டகம்
கிருட்டிணராயபுரம் 639 102
தீரன் சின்னமலை மாவட்டம்

பக்கம்: 96 விலை: ரூ.18

எண்சீர் விருத்தம், அறுசீர் விருத்தம், வெண்பா அகவல், தாழிசை என மரபுக் கவிதைகள் பல அணிவகுத்துள்ள நூல் இது. தமிழ் முதலாக நெருப்பாற்றில் எதிர்நீச்சல் தொடர்பான 43 நற்கவிதைகள் இதில் இடம்பெற்றிருக்கின்றன. எளிய இனிய கவிதைத் தொகுப்பு.

## ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளில் வெற்றி பெறுங்கள்

ஆசிரியர்: **கா.மு. பாதுசா**
வெளியீடு: நூர் பதிப்பகம்
2/515, அலி தெரு
கோமதிபுரம்
மதுரை 625 020

பக்கம்: 153 விலை: ரூ.55

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகளில் பங்குபெறும் தமிழ்நாட்டார் எண்ணிக்கை மிகவும் குறைவு. காரணம் அந்தப் படிப்பின் மீதான அச்சம், அல்லது மனோதிடமின்மை, தெளிவின்மை ஆகியவை களேயாகும். அதெல்லாம் தேவையில் லாதவை; துணிந்து படித்து அவ்வாறான தேர்வுகளில் நாமும் வெல்லமுடியும் என்கிற பலமளிக்கும் நூல் இது.

## மகாகவி சேக்ஸ்பியரின் ஹாம்லெட்

மூலம்: **சேக்ஸ்பியர்**
தமிழில்: **கவிஞர் புவியரசு**
வெளியீடு: கற்பகம் புத்தகாலயம்
18, ராஜாபாதர் தெரு
தியாகராய நகர்
சென்னை 600 017

பக்கம்: 216 விலை: ரூ.40

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் மொழிபெயர்க்கலாம் என்று மகாகவி பாரதி கொடுத்த தைரியத்தில் வெளி வந்துள்ள நூல்களில் இதுவும் ஒன்று. சேக்ஸ்பியர் எழுதிய நாடகம் எளிய இனிய தமிழில், இடையிடையே படங்களோடு வெளியிடப்பட்டிருக்கிறது.

## தன்னம்பிக்கை

மூலம்: ரால்ப் வால்டோ எமர்சன்
தமிழில்: **வ.வெ.சு. ஐயர்**

பக்கம்: 80 விலை: 10

மகாத்மா காந்தியடிகளும், நேருவும் எடுத்தாண்ட மேற்கோள் சொற்களில் பல, அமெரிக்க மேதை எமர்சனுடையவை களாகும். பல மொழி மேதையான வ.வெ.சு. ஐயர், நமக்கு அவருடைய ஒரு நூலைப் பயன் மிக்கதாகத் தமிழில் உருவாக்கித் தந்திருக் கிறார். அதுவே இது. வெளியிட்டோர் காந்திய இலக்கியச் சங்கம், காந்தி நிலையம், மதுரை 625 020

# மழைக்கால நோய்கள்

டாக்டர் எம். பாஸ்கரன் செல்வபதி

மழைக்காலம் வந்திருக்கிறது வானத்திலிருந்து அமிழ்வதால் மழையை அமிழ்தத்திற்கு ஒப்பானது என்று அந்தக் காலத்துத் திருவள்ளுவரும், அண்மைக் காலத்துப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரும் சிறப்பித்துப் பாடியிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் மழைக் காலம், மனிதர்களுக்குச் சில வகைத் துன்பங்களைத் தரும் காலமாக அமைந்து விடுவதும் உண்டு என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஒவ்வொரு பருவத்திலும் ஏற்ப சில நோய்கள் உண்டாகும் அல்லது அதிக அளவில் வேகமாகப் பரவும்.

அந்த வகையில், மருத்துவக் கண் கொண்டு பார்த்தால், சிலவகை நோய்கள் நமக்குத் தெரியவரும். அப்படிப்பட்ட மழைக்கால நோய்கள் பற்றிய நம் வினாக்களும் டாக்டர் எம். பாஸ்கரன் செல்வபதி, எம்.எஸ்., எம்.என்.ஏ.எம்.எஸ்., அவர்கள் அளித்த விடைகளும் பின் வருமாறு:

**மழைக்காலத்தில் எப்படிப் பட்ட நோய்கள் மக்களிடையே பரவக்கூடும்?**

ஒன்று மழை நீரில் அசுத்தங்கள் மற்றும் மனிதக் கழிவுகள் கலந்துவரும் மாசுபட்ட நீரை அருந்துவதால் ஏற்படக் கூடிய தொற்றுநோய்கள். இதில் முக்கியமாக வயிற்றுப்போக்கு அதாவது Diarrhoeal diseases காலரா, டைபாய்டு ஜுரம், மஞ்சள் காமாலை, போலியோ ஆகியவற்றைச் சொல்லலாம். இவற்றை நீர் மூலம் பரவும் நோய்கள் அதாவது Water-borne diseases என்கிறோம்.

இரண்டாவதாக, மழைநீர் தேங்குவதால் கொசுக்களும் ஈக்களும்பெருகி, அவற்றால் பரவும் நோய்களைச் சொல்லலாம்.

ஈக்களால் ஏற்கெனவே நான் கூறிய தொற்றுநோய்கள் அனைத்தும் பரவலாம்.

கொசுக்களினால் மலேரியா மற்றும் பைலேரியாஸில் எனப் படும் யானைக்கால் வியாதி ஆகியவை பரவலாம்.

மேற்கூறிய நீர்மூலம் பரவக்கூடிய நோய்கள் தவிர,



மழைக்காலத்தில் ஈரத்தன்மையால் ஜலதோசம், இருமல், சளி, ஆஸ்த்துமா போன்ற நோய்களும் அதிகமாக நம்மைப் பாதிக்கலாம்.

**இவ்வாறான நலக்கேடுகள் ஏற்பட அடிப்படைக் காரணங்கள் யாவை?**

உலகில் பொதுவாக வளரும் நாடுகளில் ஏற்படும் நோய்கள் பலவற்றிற்கு, அடிப்படைக் காரணம் சுத்தமான குடிநீர் இல்லாமைதான் என்று கூற லாம். உலக சுகாதார நிறுவனம்

1975-இல் நடத்திய ஓர் ஆய்வின்படி இந்திய நாட்டில், நகரத்தில் வசிக்கும் மக்களில் 80 சதவிகிதத்தினருக்கும் கிராமப் புறங்களில் வசிக்கும் மக்களில் 18 சதவிகிதத்தினருக்கும் மட்டுமே குடிக்கத் தகுந்த பாது காப்பானகுடிநீர் கிடைப்பதாகத் தெரிகின்றது. போதிய நீர் வசதி இல்லாததால் மிகப் பெரும் பான்மையானோருக்குப் பாது காப்பானக் குடிநீர் இன்னும் அளிக்க முடியவில்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும். இந்திய மக்களில் 80 சதவிகிதத் தினர் கிராமப்புறங்களில் வாழ்வ தால் மாசுபட்ட நீரினால் ஏற் படும் நோய்களும் பெரும்பாலும் கிராமப்புற மக்களையே பாதிக் கின்றன.

**குடிக்கத் தகுந்த நீர் என்று எதைச் சொல்லலாம்?**

பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்பக் குடிநீரின் தேவையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. குடிக்கத் தக்க நீர் என்பது சில தகுதி களைப் பெற்றிருக்க வேண்டும்.

நோய்க்கிருமிகள் அதில் இருக்கக்கூடாது.

தீங்கிழைக்கக்கூடிய வேதிப் பொருட்கள் Chemicals அதில் இருக்கக்கூடாது.

நீர், சுவையாக இருக்க வேண்டும்.

நீர், வீட்டு உபயோகத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

**மழைக்கால நோய்களில் முக்கியமான நோய் பற்றியும் அது அணுகாமல் தடுக்கும் முறைகளைப் பற்றியும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங் களேன்?**

மழைக்காலத்தில் பரவக் கூடிய தொற்றுநோய்களில் மிக முக்கியமானது வயிற்றுப்போக்கு நோய். இந்தியாவில் 5 வயதுக் குட்பட்ட குழந்தைகளில் குறைந்த பட்சம் 15 இலட்சம் பேர் ஒவ்வோர் ஆண்டும் வயிற்றுப் போக்கினால் இறக்கின்றனர். மருத்துவமனைகளில் குழந்தை களுக்கான வார்டுகளில் 30 சதவிகிதக் குழந்தைகள் வயிற்றுப் போக்கிற்காகவே சேர்க்கப்படு கின்றனர்.

இந்தப் புள்ளி விவரங்கள் மூலம் இந்நோய் எவ்வளவு சமூக முக்கியத்துவம் வாய்ந்தது என் பதை நாம் புரிந்து கொள்ளலாம். நோய்க்கிருமிகள் சிறுகுடலின் உட்புறத்தைச் சேதப்படுத்து வதால், நீர்ச்சத்து குடலுக்குள் உறிஞ்சப்படாமல் வெளியேறு கிறது. இதனால் வயிற்றுப் போக்கு அதாவது Diarrhoea ஏற்படுகிறது.

**அரசு ஊழியர் அகவிலைப்படி**

தமிழ்நாடு அரசு ஊழியர் களின் அகவிலைப்படி உயர்வுக் கான ஆணையைத் தமிழ்நாடு அரசு 25.9.96 அன்று பிறப் பித்தது.

**இந்த அகவிலைப்படி உயர் வுடன் மூன்றாவது தவணை யாக 10 சதவிகிதம் இடைக்கால நிவாரணமும் தரப்படும். ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அமல்படுத்தப்படும். இதன் மூலம் 11 இலட்சம் பேர் பயனடைவர். அகவிலைப்படியை மத்திய அரசு உயர்த்தியுள்ளதை அடுத்தே தமிழ்நாடு அரசின் இந்த ஆணை பிறப்பிக்கப் பட்டது.**

**வயிற்றுப்போக்கு நோய் ஏற்பட முக்கியக் காரணம் என்ன?**

இதற்குப் பல காரணங்கள் உள்ளன. வைரஸ் கிருமிகள்தான் வயிற்றுப்போக்கு ஏற்பட மிகமுக் கியமான காரணமாகும். ரோட்டா வைரஸ், எக்கோ வைரஸ், காக்சாக்கி வைரஸ், அடினோ வைரஸ், பார்வோ வைரஸ், கொரோனோ வைரஸ் போன்ற பல வைரஸ்கள் குடலைச் சேதப்படுத்தி வயிற்றுப் போக்கு ஏற்படுத்துகின்றன. அதிலும் முக்கியமாக ரோட்டா வைரஸ்தான் குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட மிகவும் முக்கியமான காரணமாகும்.

வைரஸ் கிருமிகள் மட்டு மின்றி E.Coliஸால் மோனெல்லா, ஷிவ்லா, Vibrio cholera போன்ற பாக்டீரியாக்களும் ஜியார்டியா மற்றும் அமீபா போன்ற நுண் ணுயிர்க் கிருமிகளும் வயிற்றுப் போக்கு ஏற்படுத்தலாம். இந் நோய்க் கிருமிகள் மனித மற்றும் மிருகங்களின் மலக்கழிவுகளின் மூலம் ஒருவரிடமிருந்து மற்றொரு வருக்குப் பரவுகின்றன. மாசுபட்ட நீர், உணவு மற்றும் சரிவர கைகளைக் கழுவா மையால் இவை பரவுகின்றன. ஈக்களின் உடலில் ஒட்டிக் கொண்டும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு இவை பரவு கின்றன. மழைக்காலத்தில் குடி நீரில் கழிவுகள் கலக்க வாய்ப்பு அதிகம். இதனால்தான் மழைக் காலத்தில் வயிற்றுப்போக்கு நோய் அதிகம் ஏற்படுகிறது. வயிற்றுப்போக்கு நோய் கண்டால் நோயாளி உடனே மருத்துவரை அணுகவேண்டும்.

கிருமிகளைக் கொல்ல நல்ல பல மருந்துகள் உள்ளன மற்றும் Oral Rehydration Theraphy (ORT) என்ற முறையில் வயிற்றுப்

போக்கினால் உடல் இழக்கும் நீர் மற்றும் பல்வேறு உப்புச் சத்துக் களை ஈடுசெய்யும் புதியதோர் சிகிச்சைமுறை உள்ளது. இது ஓர் உயிர்காக்கும் எளிய, செலவற்ற சிகிச்சை முறையாகும். இம்முறையில், குளுக்கோஸ், சோடியம் குளோரைடு, பொட்டாசியம் குளோரைடு, சிட்ரேட் போன்ற உப்புக்கள் கலந்த நீர் வயிற்றுப்போக்குள்ள நோயாளிகளுக்கு அடிக்கடி கொடுக்கப்படுகிறது. இப்பொருட்கள் Oral Rehydration Mixture என்று பாக்கெட்டில் பவுடராக விற்கப்படுகின்றன. இப்பாக்கெட்டை ஒரு லிட்டர் நீரில் கரைத்து அடிக்கொரு தரம் கொடுக்கலாம். இதை விலை கொடுத்து வாங்க முடியாத வர்கள், வீட்டிலேயே ஒரு லிட்டர் குடிநீரில் 5 கிராம் சமையல் உப்பையும், 20 கிராம் சர்க்கரை யையும் கலக்கி உபயோகிக் கலாம். நீரைக் கொதிக்க வைக்க வேண்டிய அவசியம் கூட இல்லை.

அதிக அளவு வயிற்றுப் போக்கு ஏற்பட்டு, உடலில் நீர்ச்சத்து குறைந்தால், 'நரம்பு ஊசி' எனப்படும் Intravenous திரவங்களை உடலில் ஏற்றும் சூழ்நிலை வரலாம்.

**காலரா நோய் உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும் நோயா?**

காலரா எனப்படுவது, விப்ரியோ காலரே (Vibrio cholerae) எனப்படும் நோய்க் கிருமிகளால் ஏற்படும் மிகக் கடுமையான வயிற்றுப் போக்காகும். தக்கத் தருணத்தில் மருத்துவக் கவனிப்பு இல்லா விட்டால் காலரா நோய் கண்டவர்களில் 100க்கு 30 முதல் 40 சதவிகிதம் பேர்வரை உயிரிழக்க நேரிடலாம். காலரா வின் அறிகுறிகள் கி.மு. 7-ஆம் நூற்றாண்டிலேயே நமது ஆயுர் வேத மருத்துவ நூலான 'அஸ்ருத சம்ஷிதா' வில் 'ஷிஷுசிகா' என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**காலரா நோயின் அறிகுறிகள் யாவை?**

காலரா நோய் கண்டவர் களுக்குத் திடீரென, மிக அதிக அளவில், வயிற்றில் வலியின்றி, தெளிந்த நீர் போன்று அடிக்கடி வயிற்றுப்போக்கு ஏற்படலாம். ஒரே நாளில் ஏறக்குறைய 40 முறை வரை வயிற்றுப்போக்கு உண்டாகலாம். வாந்தி, கண் களில் குழிவிழுதல், நாவறட்சி போன்றவை உண்டாகலாம். மிக அவசர மருத்துவக் கண் காணிப்பு இதற்குத் தேவை. நோய் ஓரிடத்தில் பரவத் துவங்கினால், பாதுகாப்புக் கெனத் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளலாம்.

**டைபாய்டு, மஞ்சட்கா மாலை நோய்க் கூறுகள் பற்றிக் கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்களேன்?**

டைபாய்டு நோய் சால் மனெல்லா எனப்படும் நுண்ணுயிர்க் கிருமிகளினால் ஏற்படும் ஒரு கொடிய ஜுர நோயாகும். பாதிக்கப்பட்ட நோயாளிகளின் சிறுநீர், மலக் கழிவின் மூலம் இந்நோய் பரவுகிறது. இந்நோயும் நீர், பால் உணவுப் பொருட்கள், மற்றும் ஈக்களின் மூலமாகப் பரவு கின்றது. டைபாய்டு நோய்க்குத் தக்க மருந்துகளும், நோய் வராமல் தடுக்கத் தடுப்பு ஊசியும் உள்ளன.

மஞ்சள் காமாலை நோய் பல்வேறு வைரஸ் கிருமிகள் ஈரலைத் தாக்குவதால் ஏற் படலாம். பொதுவாக Hepatitis-A வைரஸ் மூலமே நமது நாட்டில் இந்நோய் ஏற்படுகிறது.

இந்த வைரஸ் கிருமி மாசுபட்ட நீர் மூலம் பரவு கின்றது. குடிநீரை நன்கு கொதிக்க வைத்துக் குடிப்ப தனாலும், முறையாகக் குளோரின் கலக்கப்பட்ட நீரைப் பருகுவ தனாலும், சாப்பிடும் முன்னரும், சாப்பிட்டப் பின்னரும், கழிவறை சென்று வந்த பின்னரும், கைகளை நன்றாகக் கழுவுவதன் மூலம் இந்த வைரஸ் பரவாமல் தடுக்க முடியும். நோய் ஏற்பட்டு விட்டால் முழுமையாக ஓய்வு எடுப்பதே இந்நோய்க்கு மிக முக்கியமானதும் முதலாவது மான சிகிச்சையாகும்.

**போலியோ நோய் என்பது எப்படிப்பட்டது?**

மூன்று வகையான போலியோ வைரஸ்களினால் ஏற்படக்கூடிய இது ஒரு கொடிய நோய். Type 1 எனப்படும் வைரஸ்தான் அதிக அளவில் போலியோ நோய்க்குக் காரணமாக அமைகிறது. பொதுவாக நீர் மூலம் பரவும் இந்நோயும் மழைக்காலங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. 4 வயதுக்குட்பட்டக் குழந்தை



களையே அதிகம்தாக்கும். இந்நோயையும் பெருமளவில் கட்டுப்படுத்த முடியும். குழந்தைகளுக்குச் சரியான பருவத்தில் போலியோ சொட்டு மருந்து கொடுப்பதன் மூலம் போலியோ வராமல் தடுக்கலாம்.

**கொசுக்களால் பரவக்கூடிய நோய்கள் யாவை?**

கொசுக்கடியினால் ஏற்படும் இரண்டு முக்கியமான நோய்கள் மலேரியாவும், யானைக்கால் வியாதியும் Filariasis ஆகும். இந்நோய்களைப் பரப்பும் கொசுக்கள் தேங்கி நிற்கும் நீரில் பெருகி வளர்கின்றன. மேலும், மழைக்காலத்தில் சுற்றுப்புறத்தில் நிலவும் ஈரப்பதம் இக்கொடிய நோய்களைப் பரப்பும் கொசுக்களின் வளர்ச்சிக்குச் சாதகமாக அமைகின்றன.

**எந்த வகைக் கொசுக்கள் அந்நோய்களைப் பரப்பும் அதிலிருந்து தப்புவது எப்படி?**

மலேரியா நோய், அனாபெலஸ் என்ற வகைக் கொசுக்கள் கடிப்பதனால் ஏற்படுகின்றது. மலேரியா நோய்க்கிருமிகள் பிளாஸ்மோடியம் என்ற இனத்தைச் சேர்ந்தவை. பிளாஸ்மோடியம் வைலாக்ஸ், Falciparem, Ovale, Malariae என்ற 4 வகையான கிருமிகள் மூலம் மலேரியா ஏற்படலாம். இவற்றுள், நமதுநாட்டில் பிளாஸ்மோடியம் வைலாக்ஸும் பால்சிபேரமும் மட்டுமே மலேரியாவிற்குப் பெருமளவில் காரணமாக அமைகின்றன. கொசு மனிதனைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சும் நேரம், கொசுவின் உமிழ்நீர் மூலம் மலேரியா நோய்க் கிருமிகள் மனித இரத்தத்தில் கலக்கின்றன. இவை இரத்த அணுக்களில் பெருகி, இரத்த அணுக்களைச் சிதைக்கின்றன. அவ்வாறு இரத்த அணுக்கள் சிதைவுறும்பொழுது வெளியேறும் சில நச்சுப் பொருட்களே ஜுரம் ஏற்படக் காரணமாக அமைகின்றன. இரத்த அணுக்கள் சிதைந்து, எண்ணிக்கையில் குறைவதால் இரத்தச் சோகை Anemia ஏற்படுகின்றது.

மலேரியா நோய்க்குத் தக்க மருந்துகள் பல உள்ளன. மலேரியாவைத் தடுக்க முக்கியமாக நாம் கொசுக்கடியைத் தவிர்க்க வேண்டும்.

பிஸ்டியா வகை நீர்த் தாவரங்களை ஒழித்தும் யானைக்கால் நோய் பரவுவதைப் பெருமளவு தடுக்கலாம். மலேரியாவுக்கு இருப்பது போன்றே தேசிய யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம் ஒன்றும் நமது நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.



**இதயம் என்பது தனக்காகத் துடிப்பதில்லை; உடலும் உயிரும் வாழ்வதற்காகவே துடித்துக் கொண்டிருக்கிறது. அரசும் அப்படித்தான்!**

## அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை

சென்னை மாநகர மக்களின் நீண்டகாலக் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண, கிருஷ்ணா நதிநீரை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களிடம், மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு சந்திரபாபு நாயுடு அவர்கள் வழங்கினார் (29.9.96).

இரண்டாம் அட்டை

அண்ணல் காந்தியடிகளின் 128வது பிறந்தநாளையொட்டி அன்னாரின் திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் (2.10.96).

கடைசி அட்டை

கிருஷ்ணா நதிநீர் தமிழகத்திற்கு கிடைக்கும் நிகழ்ச்சியைக் குறிக்கும் வகையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நினைவுத் தூணையும், மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு சந்திரபாபு நாயுடு அவர்கள் 'கிருஷ்ணா நதிநீர் தமிழகத்திற்கு வருகைதர, மதகினையும் திறந்து வைக்கின்றார்கள் (29.9.96).

## மாவட்ட வருவாய் நிர்வாகத்தைச் சீரமைக்க வருவாய் ஆணைக்குழு

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 6.8.96 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையில் மாவட்ட வருவாய் நிர்வாகத்தைச் சீரமைக்க ஒரு வருவாய் ஆணைக்குழு அனுமதிக்கப்படும் என்று அறிவித்தார்.

பின்னர் 28.8.96 ஆம் நாளன்று இந்த வருவாய் ஆணைக்குழுவின் தலைவராகத்திரு பி.சபாநாயகம், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களும், உறுப்பினர்களாக திருவாளர்கள் பி.கே. லெட்சுமணன், சட்டமன்ற உறுப்பினர், கே.எஸ். இராமகிருஷ்ணன், இ.ஆ.ப. (ஓய்வு), எஸ். சிவசுப்பிரமணியன், இ.ஆ.ப., (ஓய்வு) மற்றும் டி.சங்கர் மேலாண்மை வல்லுநர் ஆகியோரும் இருப்பர் என்றும் அறிவித்தார்.

இவ்வறிவிப்பிற்கிணங்க அரசு ஒரு வருவாய் ஆணைக்குழுவை அமைக்க ஆணை பிறப்பித்துள்ளது.

இக்குழுவின் அமர்விடம் சென்னை நகரமாகும். இக்குழு, தேவையான சாட்சியங்களை விசாரிப்பதற்கும், பொதுமக்களிடமிருந்தும், மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட வருவாய்த்துறை பணியாளர்களின் சங்கங்களிடமிருந்தும் மனுக்களைப் பெறுவதற்கும் தகுந்த வழிமுறைகளை வகுத்துக் கொள்ளும்.

இக்குழு, ஓராண்டு காலத்திற்குள் தமது பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கும்.

♦♦♦♦

## தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தைக் கீழ்க்கண்டவாறு மாற்றியமைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

தலைவர் - திரு எஸ் றா. சற்குணம், துணைத்தலைவர் - திரு. எஸ். ஏ. காஜா மொய்தீன், (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்), அமைப்பாளர் (கன்வீனர்) மற்றும் உறுப்பினர் - பேராசிரியர் திரு. மரியநல்லு, திருச்சி, உறுப்பினர் - திரு டாமன் பிரகாஷ், சென்னை, உறுப்பினர் - திரு அமானுல்லாகான், சேலம், உறுப்பினர் - செயலாளர் - பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர்.

♦♦♦♦




♦♦♦♦

## திரைப்படக் கல்லூரி ஆண்டு விழா

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தின் ஆண்டு விழா 7.9.96 அன்றுமாலை எம்.ஜி.ஆர். திரைப்பட நகரத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்கு விருதுகள் வழங்கிச்சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவிற்குத்திரு ஏ.வி.எம்.சரவணன் தலைமையேற்றார். திரைப்பட நடிகை செல்வி குஷ்பு குத்துவிளக்கேற்றினார். செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு என்.எஸ். பழநியப்பன், இ.ஆ.ப., அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் எம்.ஜி.ஆர். திரைப்பட

நகரத் தலைவர் திரு முக்தா வி. சீனிவாசன் திரைப்படக்கல்லூரி மற்றும் திரைப்படப் பிரிவு இயக்குநர் திரு. பி. அமிர்தம், தேசிய திரைப்பட வளர்ச்சிக்கழக மண்டல மேலாளர் திரு. பி. பரமேஸ்வரன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் திரு இராம. நாராயணன், திரைப்படத் தயாரிப்பாளர் திரு. ஆபாவாணன், திரைப்பட இயக்குநர் திரு. அரவிந்தராஜ், எடிட்டர் திரு. பி. லெனின்', செய்தித் துறை இணை இயக்குநர் திரு. ஆர். நடேசன் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

திரைப்படக் கல்லூரி முதல்வர் திரு. ஏ. சீனிவாசராவ் அவர்கள் ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்தார். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவன மாணவர் சங்கத் தலைவர் திரு. ஆர். இளங்கோ வரவேற்புரையாற்றினார். மாணவர் சங்கத்தின் செயலாளர் திரு. தணிகை அரசு விழாவில் பங்கேற்ற அனைவர்க்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

♦♦♦♦

## பூம்புகார் சுற்றுலா வளாகத்திற்கு ரூ.1 கோடி செலவில் வளர்ச்சிப் பணிகள்

பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் கடந்த பல ஆண்டுகளாக ஏற்பட்ட கடல் அரிப்பினால், கடற்கரைப் பகுதிகளை ஒட்டி அமைந்துள்ள இலஞ்சி மன்றம் மிகவும் சேதம் அடைந்துள்ளது. இதைச் செப்பனிட்டு, சீர்செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க சுற்றுலாத்துறை முன் வந்துள்ளது. வரும் 15.10.96 க்குள் இப்பணியை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கலைக்கூடம், ஓய்வு விடுதி, சுற்றுலா குடில்கள் சீர்செய்தல், புதிய மின் அனுப்பி (டிரான்ஸ்பார்மர்) நிறுவுதல், தேவையான அளவிற்குத்தண்ணீர் பெற ஏற்பாடு செய்தல், நெடுங்கல் மன்றத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல், புதிய மின் இயக்கி, (ஜெனரேட்டர்) வாங்குதல், புதிய உணவகம் கட்டுதல், தொல்பொருள் ஆய்வுத்துறை உதவியுடன் ஒரு அருங்காட்சியகம் நிறுவுதல், புதிய பேருந்து நிலையம் அமைத்தல், மேலும் சுற்றுலா பயணிகளுக்குப்பொழுது போக்குக்காகக்கலை நிகழ்ச்சிகள் அமைத்தல், கூடுதல் கழிப்பறை கட்டுதல், தோட்ட மேம்பாடு மற்றும் சாலை மேம்பாடு செய்தல் போன்ற பணிகள் செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. பூம்புகார் சுற்றுலா வளாகம் தொடங்கப்பட்டபோது கட்டப்பட்ட சிலம்பு வடிவப்பயணிகள் காத்திருக்கும் இடம் உரிய பராமரிப்பு இல்லாததாலும், மீண்டும் அதைச் சீர்செய்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாலும், அதை இடித்துவிட்டு, அதற்குப் பதிலாக அதேபோல் சிலம்பு வடிவத்தில் புதிய பயணிகள் காத்திருக்கும் இடம் ரூ. 30.00 லட்சம் செலவில் கட்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பூம்புகார் சுற்றுலா வளாக மேம்பாட்டுப் பணிகளுக்குச்சுமார் 1 கோடி ரூபாய் இந்த நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. இதில் ரூ. 30 இலட்சம் மத்திய அரசும் மீதியை தமிழ்நாடு அரசும் வழங்கும் என்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. சுரேஷ் ராஜன் தெரிவித்துள்ளார்.

♦♦♦♦

## தீபாவளிக்குக் கூடுதல் சர்க்கரை

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, இவ்வரசு குடும்ப அட்டைதாரர்கள் ஒவ்வொருவருக்கும், கூடுதலாக 1 கிலோ சர்க்கரை வழங்க முடிவு செய்துள்ளது. இதற்கான சர்க்கரையை நியாய விலைகடைகளுக்கு அனுப்பி வைக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள் தத்தம் நியாய விலைக் கடைகளிலிருந்து இக்கூடுதல் சர்க்கரையை அக்டோபர் மாதம் அல்லது நவம்பர் மாதத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# வாசகர் இதயம்

தாங்கள் தொடர்ந்து வெளியிட்ட வேலைவாய்ப்புகள் கட்டுரை ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.எப்.எஸ். போன்ற படிப்புகளுக்குத் தக்க வழிகாட்டுவதாக இருந்தது. மிக்க நன்றி.

**-இ. கோவிந்தராசு**
காஞ்சிபுரங்குடி, இராமநாதபுரம்.

பழநிபாரதி கவிதைசிறப்பாகஇருந்தது. அடிக்கடி இதுபோன்ற கவிதைகள் இடம்பெறட்டும்.

கலைவாணர் நிகழ்ச்சி பற்றிய சுருக்கம் அருமையாக இருந்தது. 'ஆசிரியர் மடல்' அருமை .

**- தி.பொ. சண்முகசுந்தரம்**
திட்டக்குடி.

சின்ன அண்ணாமலை கட்டுரை, அறிஞர் அண்ணா அவர்களின் பெருந்தன்மையை காலகாலத்திற்கும் நிலை நிறுத்துவதாக அமைந்திருந்தது. எங்கள் ஊர் பிரச்சினை ஒரு நல்ல பகுதி.

**- புலவர் வைரி. தரளம்**
கோ.வி.பாளையம்.

பெரியாரும் - அண்ணாவும் பற்றி நெஞ்சுக்கு நீதியில் கலைஞர் அவர்கள் எழுதியிருந்ததை எடுத்துவெளியிட்டிருந்தது நன்றாக இருந்தது. இதேபோல் அண்ணாபோன்றோரின் முக்கிய எழுத்துகளும் வெளிவருமா?

**- கே.பி. எல்லப்பன்**
கடலாடி.

அனைத்துத்தரப்பினரையும் அலசி அறிந்து தகுந்தபடி புதுப்புது பகுதிகளை வெளியிடுவதில் தமிழரசுக்கு 'தமிழரசே' இணை.

**- கே. கருப்பையன்**
பட்டீஸ்வரம்.

ஐந்தாண்டுக் காலத்திற்குப் பிறகு 'தமிழரசு' இதழில் அறிவு பூர்வமான செய்திகள் வெளிவருகின்றன, மகிழ்ச்சி.

**- டி. திருமகள்,**
தெள்ளூர், வாலாஜா.

## அணுசக்தி

**50 ஆண்டுகளாக இயங்கிவரும் சர்வதேச சுகாதார விஞ்ஞான நிறுவனம் பிரிட்டனைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வந்தாலும், இதன் செயல்பாடுகளில் 90 சதவிகிதம் வெளிநாடுகளில்தான் நடைபெற்று வருகிறது.**

**முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் இந்நிறுவனம் இயங்கி வருகிறது. இந்தியாவில் 1994 முதல் டெல்லி, பம்பாய் (மும்பை) சென்னை, கல்கத்தா, பெங்களூர் ஆகிய இடங்களில் ஆலோசனை மையங்களைக் கொண்டு இயங்கி வரும் இந்நிறுவனம் மருத்துவத்துறையில் "ஸ்கேனிங்" போன்ற அதிநுட்ப பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான நவீன இயந்திரங்களை தயாரித்து வழங்கி வருகிறது.**

**அதிலும் குறிப்பிடத்தக்க அம்சம்: அணுசக்தியை அழிவுக்கு பயன்படுத்துவதைப் போல ஆக்கசக்திக்கும் பயன்படுத்தலாம் என்பதை நிரூபிக்கும் வகையில் அணுசக்திகளைப் பயன்படுத்தும் எந்திரங்களை இந்நிறுவனம் தயாரித்து உள்ளது. அந்த வகையில் பல ரேடியோ பார்மசூடிகல் எந்திரங்களை அது தயாரித்துள்ளது. வழக்கமாக இந்த எந்திரங்களில் அயோடின் மற்றும் தாலியம் போன்ற பொருட்களே பயன்படுத்தப்படுவது வழக்கம். ஆனால் அமர்ஷாமின் எந்திரங்களில் டெக்னேடியம்– 99 எம், டிரேசராக பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் இருதயம் மற்றும் மூளைப் பகுதிகளை மிகத் தெளிவாக ஸ்கேன் செய்ய முடியும். பொதுவாக அணுசக்தியுள்ள பொருள் பயன்படுத்தப்படும்போது கதிர்வீச்சு (ரேடியோக்டிவிடி) ஏற்படும் ஆபத்து உண்டு. ஆனால் இதில் பயன்படுத்தப்படும் டெக்னேடியம் –99எம் 6 மணி நேரமே செயல்படுவதால் அதனால் ஏற்படும் கதிர்வீச்சு விரைவில் மறைந்து விடுகிறது என்று அந் நிறுவனம் கூறுகிறது.**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர் :எம் அண்ணாமலை
**ஆசிரியர் குழு : ஜி. லோகநாதன்,** எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# ஆசிரியர் மடல்

எப்போதுமே மக்களாட்சித் தத்துவத்திற்குத் தனி மரியாதை உண்டு. இதைக் காஷ்மீர் தேர்தல் ஆணித்தரமாகத் தெளிவுபடுத்தியிருக்கிறது.


அண்டை நாட்டுக்காரர்கள் தந்த அசட்டுத் துணிச்சலில், அங்கிருந்த தீவிரவாதிகள் சிலர் ஆர்ப்பாட்டப் போர்ப் பாட்டுப் பாடியும்கூட, அமைதியான முறையிலே சட்டமன்றப் பொதுத் தேர்தல் நடைபெற்றிருக்கிறது; 53 சதவிகிதம் வாக்குப் பதிவாகியிருக்கிறது.

9 ஆண்டுகளுக்குப் பிறகு நடந்த அத்தேர்தலில், 6 ஆண்டுகளுக்குப் பிறகு, 2வது முறையாக வெற்றி பெற்று முதலமைச்சராகியிருக்கிறார் திரு. பரூக் அப்துல்லா.

ஆம்; அங்குள்ள 87 தொகுதிகளில், 4 கட்டமாக நடைபெற்ற அப் பொதுத் தேர்தலில், வாக்குப் பதிவில் எந்த அசம்பாவிதமும் இல்லை; 57 இடங்களில் அவருடைய தேசிய மாநாட்டுக் கட்சியே பெரும் வெற்றி பெற்றிருக்கிறது. ஒரே ஒரு சுயேட்சை வேட்பாளரும் அவரோடு இணைந் திருக்கிறார்.

1990-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி அறிவிக்கப்பட்ட அங்கே, நமது மாநில சுயாட்சிக் கொள்கைக்குப் புது மெருகூட்டும் வகையிலே, இப்போது புதிய அரசு உதயமாகியிருக்கிறது. முதலமைச்சராகத் தேர்வு பெற்றுள்ள பரூக் அப்துல்லா, ''மத்திய மாநில உறவுகளுக்கு முன்னுரிமை அளிப்போம்'' என்று அறிவித்திருக்கிறார்.

'காஷ்மீர் சிங்கம்' என்ற பெருமையுடைய சேக் அப்துல்லாவின் மூத்த மகனான பாரூக் அப்துல்லா, முதல்வரானதன் மூலம் 'இருட்டிலிருந்த காஷ்மீரத்தில் ஜனநாயக ஒளி பரவச் செய்திருக்கிறார்' என்று கூறிப் பாராட்டி, நமது முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களும் வாழ்த்தியிருக்கிறார்; நாமும் அத்துடன் நம் வாழ்த்தினை இணைப்போம்.




தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
HTA.7556.95

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



